ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642

திராவிடநாடு

மலர் 11. 7—12—52 இதழ் 23

[சிறு கதை]

ஆதரிக்கிறார்

[மு. கருணாநிதி]

புண்யகோடி என்பது அவருக்குப் பெயர். அவர் ஈடுபடாத பொதுப் பணிகளே கிடையாது. அகில உலகப் புகழ் பெறாவிட்டாலும், அனைத்திந்தியப் பெயர் கிடைக்காவிட்டாலும், தமிழகமெங்கணும் அவரை அறிவார்கள் என்ற நிலை பிறக்காவிட்டாலும், அவரது சொந்த நகரத்திலே அவரைச் சுற்றிப் பலர் சூழ்ந்தபடி இருப்பார்கள். நகர சுத்தித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் என்ற ஒரு செய்தி கிளம்பும். செய்திக்கு முன்பாக இவர் கிளம்புவார்; "நகரசுத்தியாளர்களே! தயாராகுங்கள். ரத்தம் சிந்துவோம். எதிர்களை விரட்டுவோம்" என்று முரசு கொட்டுவார். அந்தத் தொழிலாளர்களின் தலைவர்களால்கூட அப்படி கர்ச்சனை செய்யமுடியாது; இவர் அவ்வளவு பிரமாதமாக சங்கநாதம் செய்வார். அந்தக் கிளர்ச்சி அடியோடு செத்து சுடுகாடு போகிறவரையிலே தூங்க மாட்டார். தோல்விக்கு இவரே பல காரணங்களை எடுத்துச் சொல்லிவிட்டு அடுத்த போராட்டம் என்ன துவங்கலாம் என்று மூக்கில் விரல் வைத்துக்கொண்டு யோசிப்பார். நகர சுத்தியாளருக்கு அதுவரையிலே கிடைத்து வந்த சலுகைகள் சிலவும் புண்யகோடியின் பிரவேசத்தால் குறைந்து போகும்.

அப்படிக் குறைந்தால்தான் ஆத்திர உணர்ச்சி அதிகமாகப் பெருக்கெடுக்கும் என்று புது விளக்கம் தந்துவிட்டு பொதுக்கூட்டத்திலே விழுகிற மாலைகளிலே ரோஜா மலர்கள் இருக்கின்றனவா; இருந்தால் எத்தனை நாளைக்கு காப்பி போடலாம் என்று கணக்குப் போடுவார்.

திடீரென ஒருநாள் நகரசபையார் ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னதானம் என்று அறிவிப்புவிடுவார்கள்.

"ஆமாம், செய்யவேண்டியதுதான். அந்தணர் மனங் குளிர்ந்தால்தான் ஆண்டவன் மனங் குளிரும்" என்று அதற்கும் வியாக்யானம் தருவார்.

பிராமண போஜனத்திலே புண்யகோடி ஆற்றிய பணிதான் தலைசிறந்து நிற்கும். வயிறு புடைக்கத் தின்று ஏப்பமிடும் புரோகிதக் கூட்டத்தினரும் நகரசபைத் தலைவரை வாழ்த்துவதைவிட அதிகமாக புண்யகோடியை வாழ்த்துவார்கள்.

நகரசபைத் தலைவர் வெள்ளையப்ப பிள்ளை பெயருக்கேற்றபடி மிகவும் வெள்ளை இருதயமுள்ளவராயில்லாவிட்டாலும், அதிகக் கெட்டவரல்ல. நகரத்தின் முன்னேற்றத்திலே சிறிது நாட்டங் கொண்டவர்தான். சிரமங்களை ஏற்று, செல்வக் குவியலிலே ஒரு பகுதியைக் கரைத்து எப்படியும் நகரசபைத் தலைவராக வந்துவிடவேண்டுமென்று கங்கணம் கட்டி வெற்றி பெற்றவர். அவருக்கு புண்யகோடியின்மீது பற்றும் பாசமும் உண்டு. புண்யகோடிக்குப் பொதுமக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிற ஆதரவும்—சேர்மன் வெள்ளையப்ப பிள்ளைக்கு அவர்பால் அன்பு உண்டாக்க ஒருகாரணமாயிருந்தது. அதே நேரத்தில் வெள்ளையப்பருக்கு வரவேண்டிய புகழையெல்லாம் புண்யகோடி புத்திகூர்மையுடன் தன் பக்கம் திருப்பிக்கொள்வதை வெள்ளையப்பர் அறிய முடியவில்லை. அறிந்தாலும் அதுபற்றிக் கவலைப்படப் போகிறவரில்லை; அவருக்கு வேண்டியதெல்லாம் உயர்ந்த பதவி. அவர் உயர்ந்த பதவியென்று கருதுவதெல்லாம் நகரசபைத் தலைவர் பதவிதான். ஆகவே, யார் பக்கம் பொதுமக்கள் இருந்தாலும், புகழ் தேங்கி இருந்தாலும் அவர் கவலைப்படுவதில்லை. தேர்தல் நேரத்திலே பொதுமக்களின் ஏஜண்டை கைக்குள் போட்டுக்கொண்டால் போதும் என்று எண்ணுகிறவர். அதற்கென்ன, அதிக சிரமமா வேண்டும்? பணத்தால் அடித்தால் சுருண்டுவிழக்கூடிய பொதுநலவாதி புண்யகோடி பக்கத்திலே இருக்கும்போது!

அந்தரங்கத்திலே அந்தஸ்து படைத்தவர்களின் அடிமையாகவும், அம்பலத்திலே பொது நலத் தொண்டராகவும் புண்யகோடி உலவிக்கொண்டிருந்தார்.

"ஆகா, எவ்வளவு நல்ல மனிதரப்பா! ஏழைகள் துடித்தால் அவரும் துடிக்கிறாரே; அவரல்லவா ஏழை பங்காளர்" என்று ஏற்றிப் போற்றினர், குடிசை வீட்டுக்காரர்கள்.

"பிராமணாளிடத்திலே எத்தனை அன்பு! பக்தனென்றால் அவரல்லவோ பக்தர்" என்று பாராட்டி மகிழ்ந்தது, பார்ப்பனச் சேரி.

ஆற்றிலே வெள்ளம் — அணை போட மக்கள் பட்டாளம் கிளம்பும். உழைப்பார்கள், யார் யாரோ! நகர சபை, பணம் செலவழிக்கும். அங்கே தளபதியாக நின்று அதிகாரக் குரல் எழுப்புவார், நமது புண்யகோடி. தேகம் வாடாமல்—வியர்வை சிந்தாமல்—'ஆற்று வெள்ளத்தைத் தடுத்த தலைவன் புண்யகோடி' என்ற பட்டத்தை சுலபமாகப் பெற்றுக்கொண்டு போய்விடுவார்.

அழகான வீடு — அருமையான வாழ்வு—பளபளப்பு கெடாத பொதுநலத் தொண்டு—பகட்டு வெளிப்படாத அளவுக்கு தந்திர மிக்க வாழ்வு—புண்யகோடியின் சக்கரம் அப்படி உருண்டுகொண்டிருந்தது.

நகரசபையிலே ஒரு நல்ல தீர்மானம் நிறைவேறியது. தேர்தல் நெருங்கிவிட்ட காரணத்தால் நன்மை பயக்கும் தீர்மானங்கள் சிலவற்றினால் பொதுமக்களைக் கவர வேண்டிய நிலைமை ஏற்பட்டது பதவியிலிருக்கும் வெள்ளையப்பருக்கு!

வீதிகளையெல்லாம் தார் போட்டவைகளாக்கவேண்டும். ஒரே ஒழுங்காக தெருக்கள் அமைய வேண்டும். அதற்கான வேலையை உடனடியாகத் துவங்கவேண்டும்' என்று ஒரு தீர்மானம் நிறைவேறியது.

அடுத்தபடியாக நகரசபைக் கட்டடத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்று ஒரு அவசரத் தீர்மானமும் கொண்டுவரப்பட்டது.

கட்டடம் புதுப்பிக்கப்படும்வரையிலே, நகரசபை அலுவலகத்தை எங்கே வைத்துக்கொள்வது என்ற பிரச்சினை கிளம்பியது. அப்போது பொதுநலத் தொண்டர் புண்யகோடி புறப்பட்டார். மக்கள் நலனுக்காக என் வீடுகளில் ஒன்றை தற்காலிகமாக நகரசபை அலுவலகத்திற்கு வாடகையில்லாமல் தருகிறேன் என்று தம்பட்டமடித்தார்.

ஊரெல்லாம் பேசியது அவரது உதார குணத்தை மெச்சி!

நகரசபை கட்டட வேலை துவங்கியது. புண்யகோடியின் வீட்டிலே அலுவலகம் பணியாற்றியது.

புதிய கட்டடத்தின் திறப்புவிழா நடைபெற்றது. திறப்புவிழாவிலே தற்காலிக அலுவலகத்திற்கு தன் வீட்டைத் தாராளமாகத் தந்த தந்தை புண்யகோடி என்று வாழ்த்திப் போற்றினார்கள், நகர சபையார்—விழாத் தலைவர்—விரிவுரையாளர்கள்—அனைவருமே!

பொதுமக்கள் அரங்கிலே புண்யகோடிக்கு நல்ல பெயர் வந்துவிட்டது. இனி அவருக்கு வேண்டியது பணமல்லவா? அதுதானே புண்யகோடியின் இலட்சியம். அதற்கான முயற்சியிலே ஈடுபட்டார். நகர சபைக்கு ஒரு ரகசிய விண்ணப்பம் அனுப்பினார். அதில்,

"என் சொந்த வேலைகளைக்கூட கவனியாமல்—என் சொந்த வசதிகளைக்கூட எதிர்பார்க்காமல் நகர சபைக்காக—பலர் எதிர்த்துங்கூட பொருட்படுத்தாமல்—என் வீட்டை அலுவலகத்திற்கென இதுவரை கொடுத்திருந்தேன். அதனால் என் வீட்டிலே ஏற்பட்டிருக்கிற பழுதுகளை மீண்டும் புதுப்பிக்க பத்தாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. அந்தப் பத்தாயிரத்தை எனக்கு நஷ்டஈடாகத் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்"

என்பதாகக் குறிப்பிட்டிருந்தார் அந்த விண்ணப்பம் நகரசபைத் தலைவரின் பார்வைக்குப் போவதற்கு முன்பே நகரசபைத் தலைவர் வெள்ளையப்பர், தேர்தல் வேலைகளிலே ஈடுபடவேண்டியதாயிற்று. பலத்த போட்டி. பணம் நீராக ஓடியது. முடிவு பரிதாபகரமாக மாறிவிட்டது. வெள்ளையப்பர் கௌன்சிலராகக்கூட வர முடியவில்லை!

புண்யகோடிக்கு உள்ள வருத்தமெல்லாம் அந்தப் பத்தாயிரம் வரவேண்டியது போய்விட்டதே என்பதுதான்.

பொதுநலத் தொண்டன் என்ற பெயர்மட்டுந்தானா மிச்சம் என்று பெருமூச்சுவிட்டார்.

நகரசபையிலே குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டது. வெள்ளையப்பரின் ஆதிக்கம் அறவே ஒழிக்கப்பட்டு, அந்த ஊரில் அப்போது பிரபலமடைந்த மஞ்சள் கட்சி என்ற புதுக் கட்சி பதவி ஏற்றது. அந்தக் கட்சியின் தலைவரும்—நகரசபைத் தலைவருமாக பதவியேற்றவர் ராஜநிலையத்தார் என்பவர். அவருக்கும் நமது புண்யகோடிக்கும் ஒற்றுமை கிடையாது. இவ்வளவு சீக்கிரம் தேர்தல் வரப்போகிறது; அதில் ராஜநிலையத்தார் ஜெயிக்கப்போகிறார் என்று முன்கூட்டியே தெரிந்திருந்தால், புண்யகோடி அவர் பக்கம் சேர்ந்துகொண்டு பொதுப்பணியாற்றியிருப்பார். இப்போதும் ஒன்றும் முழுகிவிடவில்லை; ஒரு கை பார்ப்போம் என்று வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு புண்யகோடி புறப்பட்டார்.

புதிய நகரசபைத் தலைவரின் பார்வைக்குத் தனது பழைய விண்ணப்பத்தை அனுப்பிப் பத்தாயிரத்தைக் கேட்டார். புதுத் தலைவர் "இதெல்லாம் பழைய சமாச்சாரம்—வெள்ளையப்பரையே கேட்டுக் கொள்ளும்" என்று பதில் எழுதிவிட்டார்.

அம்மாமி ஆட்டுக்குட்டியை களவு கொடுத்த கதையாகப் புண்யகோடி மனதுக்குள்ளேயே புலம்பினார். வெளியில் சொன்னால் மக்கள் சிரிப்பார்கள், "இனாமாகத் தந்த இடத்துக்கு இவ்வளவு ரூபாய் கேட்கிறானேயென்று!"

"கிளர்ச்சி கிளர்ச்சி" என்று ஒலி கிளம்பியது. புண்யகோடி உண்

(6-ம் பக்கம் பார்க்க)

தி.மு.க. பொதுக்குழுக் கூட்ட அழைப்பு

அன்புடையீர்!

வணக்கம். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழு உறுப்பினர்களின் முதல் கூட்டம், 14—12—52 ஞாயிறன்று காலை 10-மணிக்கு, தஞ்சை தோழர் அருளானந்தசாமி அவர்கள் தோட்டத்தில் நடைபெறும்.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் பொருள்கள்:—

1. பொதுச் செயலாளர் தேர்தல்.
2. தேர்தல் பஞ்சாயத்து நியமித்தல்.
3. கழகச் சொத்துப் பாதுகாப்புக் குழு நியமித்தல்.
4. கழக ஆக்க வேலைகள்.

தாங்கள் தவறாது வருகைதர வேண்டுகிறேன்.

அன்பன்,
அண்ணாதுரை

திராவிடநாடு

காஞ்சி] 7—12—52 [ஞாயிறு

"வாய்ச் சொல் வீரர்!"

★

"சொந்த அரசும்
புவி சுகங்களும் மாண்புகளும்
அந்தகர்க்குண்டாகுமோ?",

என்று மறைந்த கவி பாரதியார் பாடினார்—நெஞ்சில் உரம், நேர்மைத் திறன், ஆகியவைகளை இழந்து வஞ்சனை செய்யும், வாய்ச்சொல் வீரர்களைப்பார்த்து. அவரைத் தேசியக் கவியென்று போற்றி, மண்டபம் கட்டி, வாழ்த்தி, பாராட்டும் காங்கிரஸ் கட்சியிலே, இன்றைய தினம், சொந்த அரசையும் புவி மாண்புகளையும், தத்தம் செய்யும் தயாபரர்கள் வளர்ந்துகொண்டேயிருக்கிறார்கள். பாரதியாரின் கீதம் போல, அவர்கள், அந்தகர்களல்ல! அகில உலகிலும் புகழ் பரவிக் கிடப்பதாகக் கர்ஜனை செய்து கொண்டிருப்பவர்கள். ஆனாலும் வாய்ச்சொல்லில் தான் வீரர்களாக விளங்குகிறார்கள். இந்த விசித்திர சித்தர்களைத்தான், அலிகள் என்றும் அந்தகர்களென்றும், துயரத்தோடு வர்ணித்தார் பாரதியார். 'விசித்திர சித்தர்', ஆளும் கட்சியினராகவிருக்கும் அவர்களது தலைமைப் பீடத்தின், 'நிரந்தர சொத்தாக' ஆகிக்கொண்டிருக்கிறதென்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

அண்மையில், இந்திய முழுமையும் தென் ஆபிரிக்க கொடுமைகளைக் கண்டித்து கர்ஜனை எழுப்பப்பட்டதை அறிவோம்.

"மலானின் திமிர்! அக்கிரமம்! அநீதி!" என்றெல்லாம் பண்டித நேரு முதல், ஒவ்வொரு தலைவரும் உரத்து முழக்கினர்.

தீண்டத்தகாத கட்சியென அவர்கள் கருதும் கம்யூனிஸ்டுகளையும் சேர்த்துக் கொண்டு, கூட்டங்கள் கூட்டி ஆபிரிக்கமலானின் அட்டகாசத்தைக் கண்டித்தார்கள். தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள்.

அவ்விதம், மலானின் கொடுமைகளைச் சித்தரித்து, அதை எதிர்த்துப் போராடுவதாக வாய்ச் சொற்களை வாள்வீச்சுகள் போல வீசிய மகிபர்கள், இன்று அவனுடன் சரிநிகர் சமானமாக அமர்ந்துகொண்டு அளவளாவிக்கொண்டிருக்கிறார்கள்.

லண்டன்மாநகரில், இந்திய நிதியமைச்சர் தேஷ்முக், மலான் பிரதிநிதியுடன் அமர்ந்திருக்கிறார். காமன் வெல்த் மகாநாடு! அங்கே, சிமிரோடு உறுமும் மலானும், அவனைத் தீயவன் என்று வர்ணிக்கும் நேருவும், அங்கம் வகித்துக் கொண்டிருக்கிறார்கள். தலைமேல் தட்டுகிறான் தடியன்! 'ஐயோ! ஐயோ!!' என்று அலறுகிறான், ஏழை!! — உலகமே, அவதிப்படும் ஏழைமீது அனுதாபம் காட்டுகிறது. ஆனால், சிறிது நேரத்துக்குள், அடிப்பவனும் அடிபடுபவனும், ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு, "நீயும் நானும் ஒன்றே!நேசங்காண்போம்நன்றே!" என்று கீதம் பாடுகிறார்கள். இந்த விசித்திரக் காட்சியைக்காணும்' உலகம் என்ன நினைக்கும்?

லண்டனில் நடைபெறும் காமன் வெல்த் மாநாட்டிலே, இந்தியாவும் தென் ஆபிரிக்காவும் கலந்து கொண்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் அரசின் மணிமுடியிலிருக்கும் ஒளிவீசும் இடங்களென்று, பெருமிதத்தோடு வர்ணிக்கப்படுபவைதான, இந்தக் காமன் வெல்த் நாடுகள்.

ஆனால், அந்தக் காமன் வெல்திலேயே, ஒன்று புலியாகவும் மற்றொன்று பூனையாகவும் இருக்கின்றன—இந்த வேற்றுமையின் விளைவால் மனிதர்கள் சாகிறார்கள்! மண்டையோடுகள் நிரம்புகின்றன! இந்த மாபெரும் கொடுமையை நடாத்திக் கொண்டிருப்பவனையும், கொடுமைக்கு ஆட்பட்டுக்கிடப்பவனையும் ஆளும் சர்க்கார்கள், குஷாலாகவிருக்கின்றன.

ஆபிரிக்கா இருக்கலாம், ஆனந்தத்தோடு. ஆனால், அவதிக்கு ஆளாகும் இந்தியாவுமா, இவ்விதம் 'இன்பம்' அனுபவிப்பது?

இந்தக் கேள்வியை, நாம், எத்தனையோமுறை எழுப்பி வந்துள்ளோம். நமது கழக மாநில மாநாட்டிலும், இந்த நிறவெறிப்பிரச்னையை விளக்கி, "அதனைக் கண்டிக்குமுகத்தானவது காமன் வெல்த் தொடர்பிலிருந்து இந்தியா துண்டித்துக் கொள்ள வேண்டும்" என்று, தீர்மானம், செய்தோம்.

ஆனால், ஒருபக்கம் நிறவெறியைக் கண்டித்துக்கொண்டு, மற்றோர் பக்கம் நிறவெறியனை 'சுக நலம்' கேட்கும், கொள்கையையே கடைப்பிடிக்கிறார், நேரு.

"ஆபிரிக்கா, எங்களை அவமதிக்கிறது! இதற்கு ஒருமுடிவுகண்டால் தான், காமன் வெல்திலிருக்க முடியும்!" என்று — பண்டித நேரு வாதிடலாம்.

"அவமானம் செய்யும் மலானும் நாங்களும் காமன் வெல்த் மேடையில் மட்டும் அமரலாம். ஆனால் வெளியில் வந்தால் வெள்ளையன்! கருப்பன்!! விவகாரமா?" என்று, சீறிக்கேட்கலாம், பண்டிதநேரு.

இவ்விதம் இந்தியா கேட்க ஆரம்பித்தால், இந்தியாவின் தன்மான உணர்ச்சி பெறுவது மட்டுமின்றி, ஆபிரிக்கக் காடுகளிலே அவதிப்படுவோராகிய நம்மவரின் வேதனைகளில் சிறிது குறைந்தாலும்குறையலாம்.

இதைத்தான் நாம் வலியுறுத்தி வருகிறோம். பொதுக்கூட்டங்களை கூட்டி சண்டமாருதம் எழுப்பும், நேரு சர்க்காரோ, ஒருபக்கம் குதிக்கிறது! மற்றோர் பக்கம் குடித்து மகிழ்கிறது!!

இலண்டனிலே நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டிலே, இரு நாட்டுப் பிரதிநிதிகளும் வீற்றிருக்கிறார்கள்

விசித்திரமான காட்சியன்றோ, இது? வெளியில் வந்தால் செருப்படி! உள்ளேபோனால் நண்பர்கள்!!

"இந்த வேதனைகளுக்கேன் வித்திடவேண்டும்? நம்மை மதிக்காத ஆபிரிக்கா அங்கம் வகிக்கும் காமன் வெல்தில் நமக்கென்ன வேலை? நம்முடைய பிரதிநிதியாகதேஷ்முக்கை ஏன் அனுப்புவது?" என்று நவ 27ந் தேதி டில்லி மன்றத்திலே,பண்டித நேருவைப் பார்த்துப் பேராசிரியர் என். ஜி. ரங்கா கேட்டாராம்.

"அதெப்படி கலந்துகொள்ளாமலிருப்பது? பல பிரச்னைகளிருக்கின்றன. அவசியம் போகவேண்டும்" என்றாராம், பதிலளித்த பண்டிதர்.

'அப்படியானால், அங்கே ஆபிரிக்கா செய்யும்கொடுமைகளைக்குறித்துப் புகார் செய்யுங்களேன்!" — என்றாராம், ரங்கா—அதற்கு பண்டிதர் அவர்கள் அளித்த பதில், "அவ்விதம் நடப்பது நமது பெருமைக்குகந்ததல்ல" என்பதாகும்.

கூறியிருக்கிறார் பண்டிதர், பெருமைக்குக் குறைவாம்! எது? "சீ! நீ கருப்பன்" என்று மனிதாபிமானமின்றிச் சுட்டுத் தள்ளுவதையும், சிறையிலே போடுவதையும், கண்டிப்பதா. கூறுகிறார், இந்தியாவின் முதலமைச்சர்.

இவ்வளவு இழிவுகளையும்தாங்கிக் கொண்டு ஏன், நாம் காமன்வெல்தில், வாழவேண்டும் என்கிற விளக்கம் தரப்படவில்லை நமக்கு.

பண்டிதர் கூறுகிறார், வெள்ளையர் கொடுமையைக் குறித்து நாம் வேதனைக்குரல் எழுப்புவது, பெருமைக் குரியதல்ல எனும் தொனியில்.

ஆனால் அகில இந்தியாவிலும் எதிர்க்கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு கண்டனக் கூட்டங்கள் நடத்திச் செல்கிறார்.

இந்த விசித்திர சித்தம் பயன் தருமா என்பதைச் சிந்திக்கும் போதுதான், நேரு சர்க்காரின் அழுக்கு நிரம்பிய உள்ளமும், 'நெஞ்சில் ஒன்றும் நடப்பு ஒன்றுமாக' இருக்கும் போக்கும், வெளியாகிறது; பாரதிபாடிவிட்டுப்போன பாடலும் காட்சி தருகிறது.

★

5-ம் பக்கத் தொடர்ச்சி

செய்திதான். ஆனாலும் இதில் ஓர் புதுமை. வேலூர் நகரிலே நடைபெற்றதாம்.

அவதியுடன் ஆங்காங்கே அலைந்து திரியும் நெசவாளர் குடும்பம் ஒன்று தம்முடைய ஊரைவிட்டு, புறப்பட்டதாம், வாழ்க்கையை நடத்த வழிதேடி—தம்பதிகளிருவர், தளிர்க்குழந்தையுடன். வழியில் அன்பு மனைவி, அடாத இவ்வுலகை விட்டு செத்துப் போனாள். விழியில் வழியும் நீரையும் துடைக்க நேரமின்றி, அவளது கணவன், பிஞ்சுக் குழந்தையுடன் தள்ளாடிய வண்ணம் வேலூர் மாநகர் சேர்ந்தானும். குழந்தையை யாருக்காவது விற்றுவிட்டு, ஒரு நாளைக்காவது வயிற்றை நிரப்பலாமே, என்கிற பயங்கர ஆசை அவனது, வயிற்றுக்குள் அடிக்கும் புயலின் காரணமாக உதித்திருக்கிறது. குழந்தையை ஏந்திக்கொண்டு, வீதிகளிலே அலைந்திருக்கிறான்! 'பிள்ளையோ, பிள்ளை' என்று கூவியிருக்கிறான்!! அவனது வியாபாரத்தை எவரும் மதிக்கவில்லை. மனமுடைந்துபோன, அந்த மனிதன், சோகத்தோடு மாநிழலொன்றிலே வந்து தள்ளாடியவண்ணம் அமர்ந்தானும். அந்த இடத்தில் ஒரு சக்கிலியத்தோழர்! பிய்ந்த செருப்புகளையும், அறுத்த ஜோடுகளையும் செப்பனிட்ட வண்ணம் அமர்ந்திருந்தவர் 'என்ன ஐயா, சமாசாரம்?' என்று பரிவோடு வினவியிருக்கிறார் நெசவாளர் தோழரை. விளக்கம், கண்ணீரோடு தரப்பட்டிருக்கிறது. இரண்டு ஏழைகளின் கண்களும் அருவியாயின. கடைசியில் அந்த சக்கிலித் தோழர்தான் அன்று முழுதும் சம்பாதித்த ரூ 1—6—0வையும், நெசவாளத் தோழரிடம் தந்துவிட்டு, அவருடைய குழந்தையைத்தாம் வளர்ப்பதாக வாங்கிக்கொண்டிருக்கிறார். பெற்றவன், கடைசி முத்தமளித்துவிட்டு, பிரிந்தான்! வாங்கியவன், வருவோர் போவோரை அழைத்து, "இதோபார்த்தீர்களா, குழந்தை. இதன் பெயர் என்ன தெரியுமா? பராசக்தி! பராசக்தி!!" என்று கூவினானும். "ஏனப்பா, அந்தப் பெயரை வைத்திருக்கிறாய்?", என்று ஒருவர் கேட்டதற்கு, "பராசக்தி படத்தை நேற்றுத்தான் பார்த்தேன். ஊர் உலகத்திலே நடப்பதை அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறார்கள், அங்கே. அதே காட்சியை இன்று கண்ணாரக்கண்டேன். அதனால்தான், இன்று, இந்த அகதிக் குழந்தைக்கும் அதே பெயரை இட்டிருக்கிறேன்" என்று பதிலளித்தானும். எவ்வளவு வேதனையும் சோகமும் தாங்கிய பிள்ளை விற்பனை, பாருங்கள்! இது போன்ற காட்சிகள், நாட்டின் நாலுவிடங்களிலே! நலிகின்றனர் மக்கள்! வாழமுடியாத காரணத்தால் ரயில் தண்டவாளங்களிலும், ரோடுகளின் நடுவிலும் படுத்துக் கொண்டு, விஞ்ஞானம் தந்த ரயிலுக்கும் காருக்கும் தம்முடைய உயிரை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள், மனிதர்கள்!! ஆனால் இதைக் கண்ணாரக்காணும் ஆச்சாரியார், 'பராசக்தி'யிலே சிவாஜி கணேசன் கூறுவதுபோல, "வடமலையானுக்கு காவடி தூக்கு" கிறார்! வடமலையோ, கேலி செய்கிறதுகேலி!! "பாரதப் போலுண்டோ, உலகினிலே?", என்று தேசிய கீதங்கள் பாடுகின்றனர், பலர்— விதவிதமான ராகபாவங்களோடு. ஆனால், அந்தப் பாரதத்தை ஆளும் 'தயப்புதல்வர்களோ,' சிலந்திச் சித்திரம் போட்டுக் காட்டுகிறார்கள்! 'பட்டினிபூமி'யின் ஆளவந்தாரோ, தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, பதில் கண்டு, திகைக்கிறார்கள்!!

இவ்வளவு கொடுமை தென்னாட்டில் தாண்டவமாடுவதை விளக்கத்தான், விகடன், சித்திரம் தீட்டியது —வேதனையோடு.

அதைக்கண்டித்துடால்மியாவின் ஏடு, படம் போடுகிறது. ஷோலாப்பூர் அதிபர்கள் கொக்கரிக்கிறார்கள் —ஆமதாபாத் ஆலையரசர்கள் குமுறுகிறார்கள். டில்லி பீடத்தினர், 'முழுத்துண்டு' தருகிறார்கள்.

தேசத்தின் ஒருமுனையிலே நடைபெறும் வேதனைக்காட்சிகள், மாளிகையதிபர்களின் உள்ளங்களை உலுக்கவில்லை. கவனத்தைக் கவரவில்லை. ஆகவே, இவ்விதமெல்லாம் செய்கிறார்கள்.

பிள்ளை விற்பனை! பிணக்குவியல் சாவுக்குரல்!—இந்த கண்றாவிகளைப் பார்க்க முடியாத சக்தி, அந்த அதிபர்களிடமும் வடநாட்டுப் பீடத்திடமும்இருக்கிறது. அந்த'சக்தி'க்கு, ஆட்பட்டுக்கிடக்கும் டில்லி சர்க்காரைத்தான், ஆச்சாரியார் கேட்கிறார்—வேண்டிய வண்ணம் கோருகிறார்—"பாராயோ, எமது பரிதாபத்தை! தீராயோ, எமது சோகத்தை"—என்பதாக.

"பராசக்தி"க் காட்சிகள், நமது பூமியில்! தம்மிடம் குடிகொண்டிருக்கும் "பாராசக்தி"யினைக் காட்டுகிறார்கள் வடநாட்டு அதிபர்கள்!!

அவலக்குரலைக் கேட்டுணரவும் வேதனைக் காட்சிகளைப் பார்க்கும் 'சக்தி'யையும் தமது சுயநலத்துக்குத் தத்தம் செய்து கொண்டு, சித்திரம் தீட்டிக்காட்டுகிறது, டால்மியாவின் ஏடு. சிலந்தியாம் ஆச்சாரியார் — நைத்தறிக்காக ஆதரவுதர வந்ததும் இந்தப் பட்டம் சூட்டப்படுகிறது.

நமது, 'விகடனே', வேதனைச் சித்திரம் வரைகிறது — பரிதாபத்தோடு.

இந்த இருபடவிளக்கங்களையும் உணர வேண்டுகிறோம். இதில் பொதிந்திருக்கும் கருத்துக்கள், நமது கவனத்துக்குரியவை. மறந்துவிடவேண்டாம், விகடனும் தேசிய இதழ்தான்! டைம்ஸ் ஆப் இந்தியாவும் மூவர்ணக் கொடிக்கு முரசம் தட்டும் ஏடுதான்!

★

பாண்டியன் படுகொலைக் கண்டன மாபெரும் ஊர்வலம்

7—12—52 ஞாயிறு மாலை 3-மணிக்கு சென்னை சிந்தாதரிப் பேட்டை நேபியர் பார்க்கிலிருந்து புறப்பட்டு சென்னையிலுள்ள பலமுக்கிய வீதிவழியாக வந்து — வண்ணை கல்லறையில் முடிவுறும் — இயக்கத் தோழர்களனைவரும் தவறாது கொடிகளுடன் கலந்துகொள்ளவேண்டுகின்றோம்.

தி. மு. க.
சென்னை மாவட்டம்.

நால்வரோதிய தமிழ் வேதம்!

[அடிகள்]

தமிழ்நாட்டில் வழங்கும் தேவார திருவாசகங்கள் தமிழ் வேதமாகையால், அவற்றை தமிழ்மக்கள் தங்களுக்கு உரிய நூலாகக் ஆக்கிக்கொள்வதே முறை என்று சிலர் அழுக்காடித் தம் கொள்கையை நிலைநாட்டமுயல்கின்றனர். தேவார திருவாசகங்களைப்பற்றி நாம் குறை கூறவிட்டாலும், அவற்றின் அமைப்பைப்பற்றியாவது ஆராய்வது குற்றமாகாதென்றே நம்புகின்றேன். தேவார திருவாசகங்களெல்லாம் தமிழ்மக்களுக்குப் புறம்பான இந்து மதக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு, அம்மதக்கடவுளின் பேரில் பாடப்பெற்றனவென்பது ஒருபுறமிருக்க, அவை எல்லாம் தமிழ் மக்களுக்கும் அதிலும் அறிவாராய்ச்சியிற் சிறந்த தமிழ்ப்பேரறிஞர்களுக்கும் உடன் பாடல்லாதனவான பதினெண் புராணக்கதைகளையும், இராமாயணம் பாரதம் முதலான காவியங்களையும் ஆதாரமாகக்கொண்டு பாடப்பட்டனவேயாம் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள் என்பதோடு, இப்பதினெண் புராணக்கதைகளும் இராமாயண பாரதக் கதைகளும் இல்லாவிட்டால் ஒரு தேவாரப் பதிகங்கூடப் பாடியிருக்க முடியாதென்பதும், ஐயுறவின்றித் தெரியக்கிடக்கின்றது. எனவே, ஒரு சிலர் தங்கள் பிழைப்புக்காகவே புராண இராமாயண பாரதக் கதைகளை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்பதை ஒப்புக்கொள்ளும் தமிழறிஞர், அக்கதைகளையே ஒவ்வொரு பாடலிலும் சான்றுகள் காட்டிப் பாடப்பெற்ற தேவார திருவாசகங்களை ஆதாரமாகக்கொண்டு வாழ்க்கை நடத்த முற்பட்டால், தமிழ் மக்கள் இந்து மதத்தினின்றும் விடுபட்டுத் தனித்தமிழராக வாழமுடியுமானென்பதையும், திராவிடநாட்டைத் தங்களுக்காக ஆக்கிக்கொள்ள முடியுமா என்பதையும், இந்துமத சட்டத்தை (Hindu Law) மாற்றி அமைத்துக்கொள்ள முடியுமா என்பதையும் ஆழ்ந்தெண்ணிப் பார்த்தல் வேண்டும். சற்றேறக்குறைய 8550 பாடல்கள் தேவாரம் திருவாசகமாகிய இரண்டிலும் இப்போது உள்ளன. இவற்றில் ஒரு பாடலையாவது இந்து மத புராண இதிகாசங்களை நீக்கிப் பாடியதாகக் காணமுடியாது.

அன்றியும், இந்நால்வர் பாடிய தேவாரதிருவாசகப்பதிகங்கள்முழுவதும் இந்து மதத்திற்கு முதனூலாகவுள்ள இருக்கு முதலான வேதங்களில் இருந்து எடுக்கப்பட்ட சாரம் என்றும் சொல்லப்படுகிறது. எப்படியென்றால்,

"வேதம் பசுவதன்பால்
மெய்யாகம நால்வ
ரோதுந் தமிழதனி
னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யினுறு சுவையாம்
நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்."

என்றிங்ஙனம் சைவ மதத்திற்குத் தாய் நூலாகக்கருதப்படும் சிவஞான போதச்சிறப்புரையில் கூறப்பட்டுள்ளது. அதாவது, வேதங்களை ஒரு பசுவாகவும், ஆகமங்களை அப்பசுவினிடத்திருந்து உண்டாகும் பாலாகவும், சம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர் மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பாடிய தேவார—திருவாசகங்கள் அப்பாலினின்றெழும் நெய்யாகவும், சிவஞான போதம் அந்நெய்யிற் காணப்பெறுஞ் சுவையாகவும் வைத்துக் கூறப்பட்டிருப்பதால், தேவாரத்தைத் தமிழ் மக்கள் தங்கள் நூலாக ஒப்புக்கொள்வதும், அதனை ஆதாரமாக வைத்துத் தமிழ் மக்கள் ஒரு மதத்தைப் பின்பற்றி ஒழுகுதலும் யாங்ஙனம் இயலும். இருக்கு முதலான வேதங்களும் அவற்றின் வழிநூல் சார்பு நூல்களாக எழுந்த ஆகமங்கள் முதலியனவும் தமிழ்மக்களின் நெறிக்கு மாறுபட்டனவாகக் கருதி ஒதுக்கும்போது, வேதத்தின் பேரப்பிள்ளையாகிய தேவார—திருவாசகங்களை மட்டும் தமிழ் மக்கள் தங்களதாகக் கொள்ளுதல் பொருந்துமா என்பதனையும் நம்மவர் ஊன்றிப் பார்த்தல் வேண்டும்.'

இனித் தேவாரப் பதிகங்களிற் பெரும்பாலன செல்லரித்து விட்டன என்றும் சொல்லப்படுகிறது. ஒருவேளை அழிந்துபோன அப்பதிகங்களில் புராண இதிகாசக் கதைகள் கலக்கப் பெறாமல் பாடப்பெற்றிருக்கலாம். அப்பதிகங்களிலெல்லாம் தமிழ்மக்களின் ஒழுக்க வழக்கங்களைப்பற்றி வியந்து பாடியிருப்பதைக்கண்டே அப்பதிகங்களை எல்லாம் அழித்துவிட்டுச், செல்லரித்துப் போயின என்ற கதையைக் கட்டி விட்டனரோ என்று ஐயுறவும் இடம் ஏற்படுகிறது. ஏனென்றால், தேவாரப் பதிகங்கள் எல்லாம் சிதம்பரத்திலுள்ள கனகசபைக்குப் பின்புறத்தில் ஓர் அறையில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரின் கையடையாளங்களுடன் சேமித்து வைக்கப்பட்டுள்ளன வென்று, திருநாரையூரிலிருந்த பார்ப்பனராகிய நம்பியாண்டார் நம்பிக்கு அவ்வூரிலுள்ள பொல்லாப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளினரென்றும் அதனையறிந்த குலசேகரன் என்ற சோழ மன்னன் நம்பியாண்டார் நம்பியையும் உடன் அழைத்துக்கொண்டு சிதம்பரம் சென்று, பொல்லாப்பிள்ளையார் கூறிய அடையாளப்படி கதவைத்திறந்து பார்த்தபோது, ஏடுகளிற் பெரும்பாலன செல்லரித்துக் கிடந்ததுகண்டு, அவர்கள் பெரிதும் வருத்தமுற்றதாகவும், அது கண்ட கடவுள் உடனே மறைவாக (அசரீரியாக) வந்து, "இப்பதிங்களில் இக்காலத்திற்கு வேண்டுவனவற்றை நீக்கி, ஏனையவற்றைச் செல்லரிக்கும்படி நாமே கட்டளையிட்டோம்" என்று கூறியதாகவும் சொல்லப்படுகிறது. உண்மையாகவே ஏடுகள்செல்லால் அரிக்கப்பட்டிருப்பின், அரிக்கப் பட்டவை போக எஞ்சியிருந்த நல்ல ஏடுகளை எடுத்ததாகக் கூறுவதைவிட்டுச், செல்லரித்ததற்குச் சாட்சி சொல்வதற்காகக் கடவுள் அங்கே வந்தார் என்று கூறவேண்டியதில்லை. அங்ஙனங் கூறுவதினின்றும் நாம் அறியக்கிடப்பதென்னவென்றால்; நம்பியாண்டார் நம்பி என்ற பார்ப்பனப் பெரியார் தாம் கதவைத்திறந்து ஏடுகளைஎடுத்துப்பார்த்தபோது, அவற்றில் பெரும்பாலன தங்கள் கொள்கைக்கு மாறுபடப் பாடப்பெற்றிருத்தலைக்கண்டு, அவற்றை எல்லாம் கிழித்தெறிந்து விட்டுத் தங்களுக்கு உடன்பாடுள்ளனவற்றை மட்டும் தெரிந்தெடுத்திருக்கவேண்டும். அங்ஙனந் தெரிந்தெடுத்த பதிகங்களிலுஞ் சிற்சில பதிகங்களில் பாடல்கள் குறைந்தும், பற்பல பதிகங்களில் பாடல்கள் மிகுந்தும் இருத்தலைக்கண்ட அக்காலத் தமிழறிஞர் அதன் காரணத்தை அறிய முயன்றபோது, நம்பியாண்டார் நம்பியும் அவரைச்சார்ந்தாரும், ஏடுகள் பலவற்றைச்செல்லரித்து விட்டதாகவும், அதற்குக் காரணம் கடவுளே சொல்லியுள்ளார் என்றும் கதையை முடித்த, அங்ஙனங் கேட்டவர்களை நம்பும்படியுஞ் செய்திருத்தல்வேண்டும். அவர்கள் அங்ஙனஞ் செய்ததற்குத் தக்க காரணம் இருப்பதால் தான், இதனை இவ்வளவு விளக்கிக் கூறவேண்டியிருக்கிறது. அதன் காரணத்தையுஞ் சுருக்கமாகக் கூறுகின்றேன். கேட்க.

தேவாரத்தைப் பற்றிய வரலாற்றில் மூவரும் சேர்ந்து ஒரு நூறாயிரத்து இரண்டாயிரம் (1,02,000) பதிகங்கள் அதாவது, ஏறக்குறையப் பத்துநூறாயிரத்து இருபதினாயிரம் (10,20,000) பாடல்கள் பாடியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில்,

திருநாவுக்கரசர்	49,000
சுந்தரர்	37,000
சம்பந்தர்	16,000
ஆக	1,02,000

பதிகங்களாகும். இதிற் செல்லரித்ததாகச் சொல்லப்படும் பதிகங்கள் போக இப்போதுள்ளபதிகங்களில்,

சம்பந்தருக்கு	384
திருநாவுக்கரசருக்கு	311
சுந்தரருக்கு	100
ஆக	795

பதிகங்களே இப்போது எஞ்சியுள்ளன. இனி மூவர் பதிகங்களிலுஞ் செல்லரித்த கணக்கையுங் கீழே தருகின்றேன்.

சுந்தரர்	36,900 பதிகங்கள்
சம்பந்தர்	15,616 பதிகங்கள்
திருநாவுக்கரசு	48,689 பதிகங்கள்
ஆக	1,01,205

பதிகங்களாகும். இந்தக் கணக்கின்படி திருநாவுக்கரசரே மற்ற இருவரைப் பார்க்கிலும் மிகுதியான பதிகங்கள் பாடியிருப்பதாகத் தெரிகிறது. அதிலுந் திருநாவுக்கரசருடைய பதிகங்களே பெருந்தொகையாகச் செல்லுக்கிரையாகி இருப்பதாகவுந் தெரிகிறது. ஏடுகள் எல்லாஞ் செல்லரித்து மண்ணோடுமண்ணாய்ப் போயிருந்திருப்பின், அவற்றையெல்லாம் எப்படிக் கணக்கெடுத்திருக்க முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. ஒரு வேளை படிப்பதற்கு முடியாமல் சிற்சில இடங்களில் தான் செல்லரித்திருந்தனவென்றால், அதை ஒருவாறு ஒப்புக்கொண்டாலும், திருநாவுக்கரசருடைய பதிகங்களை மட்டும் பெருந்தொகையாகச் செல்லரித்திருந்ததாகக் கூறப்படுவதன் காரணம் என்ன? திருநாக்கரசர் இனிமையாகவுந் திறமையாகவும் பாடியதனால் அவருக்கு நாவுக்கரசர் என்ற சிறப்புப் பெயர் கிடைத்ததாகையால், அவருடைய பாடல்களிலுள்ள சுவை மிகுதி தெவிட்டுதலில்லாததாய் உண்பதற்குப்பெருஞ் சுவைப் பயப்பதாய் இருந்தது. அதனால் செல் அவருடைய பதிகங்களை மிகுதியாகச் சாப்பிட்டு விட்டதென்ற ஒரு காரணத்தைத் தவிர வேறு காரணம் எதுவும் இருப்பதாகத்தெரியவில்லை. ஆனால், செல்லு ஏட்டை தின்றதா? அல்லது பாட்டைத் தின்றதா? என்ற கேள்வி பிறந்தால் செல்லுக்கு ஏட்டில்பாட்டிருப்பதும் இல்லாததுந்தெரியாது, அது ஏட்டைத் தின்றபோது பாட்டும் ஏட்டோடு தொலைந்துவிட்டது என்றுதான் சொல்லமுடியும்.

இனி, ஏடுகளைச்செல் அரிக்கவில்லை என்பதற்கு யாம் கூறும் இன்னுமோர் காரணத்தையும் அன்பர்கள் கருத்தூன்றிப் பார்த்தல் பெரிதும் இன்றியமையாததாகும். அதாவது, அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரும் பாடியதாகக் கூறப்படும் தேவாரப் பதிகங்களில், அம்மூவரும் பாடிய முதற் பதிகங்களும் இறுதிப் பதிகங்களும் செல்லின் வாயில் அகப்படவில்லை. மூவருடைய பதிகங்களிற் பெரும்பாலான செல் அரித்துப்போயினவென்பது உண்மையானால், இவர்கள் பாடிய முதல் இறுதிப் பதிகங்களில் ஒரு பாடலாவது செல்லுக்கு அகப்படாமல் தப்பியது வியப்பாகவே இருக்கிறது. ஒரு வேளை கடவுளின் திருவருளால் அவை தப்பின என்று சொன்னால், அது பொருந்தா உரையாம். ஏனெனில், மூவர் பாடிய தேவாரம் முழுவதுமே கடவுளின் கட்டளையால், அவருடையஅருளைப் பெற்றே பாடப்பட்டனவாகக் கதையிற்காணப்படுகிறது. இங்ஙனம் கடவுளின் கட்டளையும் அருளும் ஒருங்கு சேரப் பெற்றுப் பாடப்பட்ட பதிகங்களைப் பின், செல் அரித்ததென்றால், செல் கடவுளைப் பார்க்கினும் ஆற்றல் வாய்ந்த ஒரு பெரும் பொருளாகவன்றோ மதிக்கப்படல் வேண்டும்; அல்லது அப்பதிகங்களைப் பாடுவதற்குக் கடவுளின் கட்டளையும் அருளும் கொடுக்கப்படவில்லை என்றாவது கூறவேண்டும். அங்ஙனமின்றித் தேவாரப் பதிகங்கள் எல்லாம் கடவுளின் அருளாற் பாடப்பட்டனவென்று கூறிவிட்டுப்பின், செல் அரித்து விட்டதென்று கூறுவது முன்னுக்குப்பின் முரணாய் இருப்பதுமன்றிக், கடவுட் தன்மைக்கும் மாறு பட்டதாய் இருக்கின்றது. அன்றியும், தேவாரப் பதிகங்கள் எல்லாம் கடவுளின் திருவருளைப் பெற்றே பாடியன வென்று கூறிவிட்டுப் பின் அவை செல் அரித்து விட்டன வென்று கூறுவதும் அங்ஙனம் செல் அரிப்பதற்குக் கடவுளே கட்டளையிட்டார் என்று தணிவு (சமாதானம்) கூறிக் கதை எழுதுவதும் அக் கதைகளைப் படிப்பவர்கள் மீது அறியாமையை ஏற்றி அவர்களை மூட நம்பிக்கைக்கு ஈர்த்துச்செல்வதாகவுமே இருக்கிறது. எனவே தேவாரப் பதிகங்கள் எல்லாங் கடவுளின் கட்டளையையோ அன்றி அவரின் அருளையோ பெற்றுப் பாடப்பட்டன அல்ல வென்பதும்; மேற்கூறிய தேவார வரலாற்றில் காணப்படும் பதிகங்கள் எல்லாம் மூவரால் பாடப்பெற்றுப்பின் அவற்றுள் பெரும் பகுதியைச்செல் அரித்து விட்டதாகக் கூறுவதை மெய்யெனக்கொள்வது ஏலாதென்பதும், தேவாரப் பதிகங்களில் பெரும் பகுதி இல்லாமல் ஒழிந்ததற்கு நாம் கூறும் மறுக்க முடியாத காரணமே மெய் என்பதும் யாவராலும் ஏதொரு ஐயுறவுமின்றி ஒப்புக்கொள்ளப்படும் என்க.

எனவே, திருவுநாவுக்கரசரின் பதிகங்களைச் செல்லுந்தின்னவில்லை, மண்ணுந்தின்னவில்லை, சூழ்ச்சிதான் தின்றுவிட்டதென்ற முடிவுக்கே நாம்வரவேண்டியிருக்கிறது. ஏனென்றால், திருநாவுக்கரசர் ஒரு தமிழனாய்ப்பிறந்ததால், அவர் தமிழ் மக்களுடைய பழக்க வழக்கங்களையும், ஒழுக்க நாகரிகங்களையுந் தமது பாடலில் வியந்தும், புகழ்ந்தும் இந்துமதமாகிய சைவ மதத்திலுள்ள பித்தலாட்டங்களை விளக்கியும் பாடி இருந்திருப்பார். அதுகண்டு மனம் பொறாதவர்கள் அவருடைய பதிகங்களை அழித்திருத்தல் வேண்டும். அதோடு, திருநாவுக்கரசருடைய பதிகங்களை மட்டும் அழித்தால், பின்னல் கேள்விக்கிடமாகுமென்பதை முன்கூட்டி அறிந்தே பார்ப்பனராகிய சுந்தரர் சம்பந்தருடைய பதிகங்களையும் செல்லரித்து விட்டதாகக் கதை கட்டி வைத்து, அச்சூழ்ச்சியை இன்றுவரை எல்லாரும் நம்பும்படியுஞ் செய்து விட்டனர். என்னே சூழ்ச்சி! என்னே பித்தலாட்டம்!

எனவே, தங்களைச் சைவப் பெருஞ் சீலர்கள் என்று சொல்லிக்கொள்ளும் தமிழ்மக்களால் கொண்டாடப்படுந் தேவார திருவாசகங்கள் எல்லாம், சிவனருளைப் பெற்ற சைவ சமயாசிரியர்களால்—சிவனைப் போற்றியும் புகழ்ந்தும்—வாழ்த்தியும் பாடப்பெற்ற பாடல்களாம் என்றுஞ் சொல்லப்படுவதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்.

ஏனென்றால் இந்தத் தேவார திருவாசகங்கள் எல்லாம் பண்டாரப் பாடல்கள் என்றும், அவற்றைச் சிவன் கோயில்களில் நடைபெறும் பூசை—விழாக் காலங்களில் பாடக்கூடாதென்றும் வடமொழிக் குரியவர்களால் செய்துவைக்கப்பட்டுள்ள ஏற்பாடான ஆரியக் கொள்கை இன்றுந் தமிழ் நாட்டிலுள்ள எல்லாச் சிவன் கோயில்களிலும் நடைமுறையில் இருந்துவருவதோடு, வடமொழி மந்திரங்களைக் கொண்டே சிவனுடைய காரியங்கள் எல்லாம் நடைபெற்றும் வருகின்றன! உண்மையாகவே சிவன் தமிழ்மக்களுக்குரிய கடவுளும், தமிழ்மொழியில் விருப்பமும் உடையவராய் இருந்தால், தம்முடைய அருளினாலே, தாமே அடியெடுத்துத்—தம்மையே புகழ்ந்து பாடப்பெற்ற தேவார திருவாசகங்களைத் தம்முடைய முன்னிலையில் பாடக்கூடாதென்ற ஆரியக் கொள்கையின் அடிவயிற்றில் நெருப்பிட்டு, வடமொழி மந்திரங்களின் மண்டையில் அடித்துத், தமிழ் மக்களைக்கொண்டே, தமிழ் மொழியிலேயே தம்முடைய காரியங்கள் எல்லாம் நடைபெறும்படி செய்திருக்க வேண்டும். இவ்வாறு செய்திருந்தால், 'எங்கள் சிவன்' — 'எங்கள் சைவம்' என்று கூறித் திரியும் சில தமிழ்ப் பெரியார்களின் மானமாவது ஒருவாறு காப்பாற்றப்படும். அன்றியும், வடமொழி வழங்காத தமிழ் நாட்டிலுள்ள கோயில்களில், தமிழ் மக்களுக்குப் புரியாத வடமொழி மந்திரங்களைக்கொண்டு சிவனுடைய காரியங்கள் எல்லாம் நடைபெறவேண்டுமானால், அக் கடவுள் வடமொழியாளர்க்குரிய கடவுளாவரேயன்றித் தமிழ் பேசுந் தமிழ் மக்களுக்குரிய கடவுள் ஆகார் என்பதனையாவது சைவத்திற்காகவும் சிவனுக்காகவும் பரிந்துபேசுந் தமிழ்ப் 'பெரியார்கள்' எண்ணிப் பார்ப்பதில்லை. அதுவேயுமன்றித், தமிழ் நாட்டிலுள்ள கோயில்களெல்லாம் தமிழ்மக்களுடைய பணத்தைக் கொண்டே அமைக்கப் பெற்றனவென்பதும், அங்கெல்லாம் நடைபெறும் பூசை—விழாச் செலவுகள் எல்லாம் தமிழ்மக்களுடைய பணத்தைக்கொண்டே நடைபெறுகின்றனவென்பதும், இங்ஙனம் தமிழ்மக்களுடைய செலவில் எல்லாக் காரியங்களும் நடைபெறுங் கோயில்கள் எதிலும் தமிழ்மக்கள் நுழையவோ, அன்றித், தமிழ் மொழியில் வழிபாடு செய்யவோ முடியாமல் இருப்பதன் காரணத்தையாவது சைவத் தமிழ்ப் பெரியார் எவரும் ஒரு தினைத்துணையேனும் தம் அறிவுக்கு வேலை கொடுத்துப் பார்ப்பதில்லை. வறிதே வடமொழியைத் தேனெனப்பருகி—ஆரியக்கொள்கையைக் கற்கண்டெனச் சுவைத்து, தமிழ் மக்களைச் சூத்திராக்கி மகிழ்ந்து நிற்குஞ் சிவனைத் தங்கள் கடவுள் என மானங் கெட்டுச் சொல்லித் திரிவதாலும், தேவார திருவாசங்களை நால்வரோதிய தமிழ்வேதம் அவற்றை நாம் பாடிக்கிடப்பதே முறை என்றுசரைவதாலும் தமிழறிஞர் சிலருக்கு ஏற்படும் பயன் யாதென்றுதான் எம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. படிக்கவும், படிப்பதால் பயன் பெறவும் குறள் இருக்க—சங்கநூல்கள் இருக்க, அவை தம்மை எல்லாம் அறியாதவராய்— அறிய விருப்பமில்லாதவராய்—அறிவை அழித்தொழிக்க வல்ல ஆபாசக் கதைகளே நிரம்பிய புராண இதிகாசங்களின் மறு வடிவமான தேவார திருவாசகங்களை விரும்புவது, கனியிருப்பக் காய் கவர்ந்தது போலாகும் என்பதனை இனியாவது உணரமாட்டார்களா என்பதற்காகவே இதனை எழுதுகின்றோம்.

★

வாங்-அன்-ஷி

[கதிரன்]

சமதர்மச் சோலையாக சீனு விளங்குகிறது, இன்று. இதே சீனுவில், பதினொன்றும் நூற்றுண்டில், சக்கரவர்த்திகள் அரசோச்சிய காலத்தில் தோன்றிய பேராற்றல் மிக்கார் ஒருவருடைய சாதனைகளின் விவரம் கீழே தரப்படுகிறது:

வெற்றிவீரன் வில்லியம், ஹேஸ்டிங்ஸ் போரில் வெற்றி கொண்டபின், தான் கொண்ட வெற்றிகளால் இங்கிலாந்தை ஐக்கியப்படுத்துவதில் தீவிரமாக முனைந்து கொண்டிருக்கிறன். அதே ஆண்டுகளில்சீனுவில் சமுதாய சமதர்மக் கொள்கை அமுலாக்கும் முயற்சி பரிசோதிக்கப்பட்டது. சீனுவின் சரித்திரத்திலே இந்த வரலாற்றுப் புகழுக்குரியவர் ஒரு சிறந்த அரசியல் தந்திரியும் தத்துவஞானியுமான வாங்--அன்—ஷி(Wang-an-shih) என்பவராவர்.

வாங்—அன்—ஷி 1021—ஆம் ஆண்டில் கியாங்—சி (Kiang—si) யில் பிறந்தவர். அவர் தகப்பனர் அரசாங்கத்தில் ஒரு முக்கியமான பதவியிலமர்ந்திருந்தார். அதனுல் வாங்—அன்—ஷி நல்ல முறையில் கல்வி பெறும் வசதி இருந்தது. மாணவராக இருந்த நாட்களிலேயே சிறப்புடனும் நன்மதிப்புடனும் விளங்கிய அவர் சரளமான நடையில் எழுதும் வன்மை பெற்றிருந்தார். பரீட்சைகளின்போது 'அவரது பேனு விடைத்தாளின் மேல் பறந்து செல்லும்' என்று அவருடைய வன்மைக் குறித்துச் சொல்வதுண்டு. அவ்ருடைய இலக்கியக் கட்டுரைகள் ஈர்த்த கவனம் அவரை அரசாங்கப் பதவியில் நுழைத்தது. மாஜிஸ்ட்ரேட் பதவியில் அமர்ந்த அவர் விரைவில் நீதிபதியானர். பின்னர் புகழ்பெற்ற ஹான்—லின் கல்லூரியில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியிலிருக்கும் பொழுது சீன இலக்கியங்களை ஆராய்வதில் ஈடுபட்டார். அதே சமயத்தில் அவர் வாழ்வின் மற்ற அம்சங்களிலும் மிகுந்த கவனம் செலுத்தினர். மருத்துவம், தாவர நூல், விவசாயம், தையல்வேலை ஆகிய அனைத்திலும் கருத்துக் கொண்டு கற்று வந்தார்.

எதையும் ஆராய்ந்தறியும் திறன் படைத்த வாங்—அன்—ஷி ஒரு சீர்திருத்தவாதிக்கேற்ற தன்மையும், கருத்தும் கொண்டிருந்தார். அவர் அன்று அடைந்திருந்த ஒப்புயர்வற்ற நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டுமாயின், அவர் காலத்துச் சீனுவை நாம் முதற்கண் தெரிந்து கொள்ளவேண்டும். அவருடைய காலத்துக்கு ஒரு பதினறு நூற்றுண்டுகளுக்குமுன் கன்பூஸியஸ் உருவாக்கிய சமுதாய, அறிவியல் திட்டங்கள் வாழ்வின் எல்லா அம்சங்களிலும் அசைக்க முடியாத சட்டமாக நடைமுறையில் இருந்து வந்தன. அந்த நடைமுறைக் கோட்பாடுகளில் கடுகளவு மாற்றம் செய்ய யார் முயற்சிசெய்தபோதிலும் அது நாத்திகச் செயலாக, பக்தியற்றவர் செயலாகக் கருதப்பட்ட காலம். நாட்டின் முன்னேற்றத்திற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு எவ்வளவோ தடுப்புச் சக்திகள் முட்டுக்கட்டைகளாக நிற்கவே செய்தன.

அவர் தொடுத்த முதல் பாணம் கல்விமுறையைத் தாக்கியது. அன்றிருந்த கல்விமுறை கன்பூஸியஸ் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டது. பள்ளியின் பாடத்திட்டத்தில் அணியிலக்கணம்தான் முக்கிய பாடம். அதை முதலில் மாற்றியமைக்க விரும்பினர். மாணவர்கள் அன்றுட அரசியல் விவகாரம், சமூக பொருளாதாரப் பிரச்சினைகள், அவை தீர்க்கப்படுவதற்கான வழி வகை ஆகியவற்றைக் கற்கவேண்டுமென்பது அவர்தம் நோக்கம். ஓரளவு அதில் வெற்றியும் பெற்றார். மாணவர்களும் தங்கள் பழைய பாடபுத்தகங்களைத் தூக்கியெறிந்துவிட்டு அவற்றிற்குப்பதிலாக சரித்திரம், பூகோளம், அரசியற் பொருளாதாரம் முதலியவற்றைக் கற்பதில் தீவிரமாக முனைந்தார்கள். கல்வியின் குறிக்கோளை, வழிவகையைப் பொறுத்தவரையில் புரட்சியே உண்டாக்கிவிட்டார்.

பின்னால் தாம் புகுத்த விருக்கும் சமூகஅரசியல் சீர்திருத்தங்களுக்கு ஆக்கந்தரும் அடிப்படையாக இருக்குமென்று தெரிந்தே கல்வி சீர்திருத்தங்களை அவர் முதலில் புகுத்தியிருக்கலாம். மேலும் இந்த சீர்திருத்தம் அன்றைய சமூகப் பிரச்னைகளிலும் கவனம் செலுத்தும் அளவுக்கு எல்லாவகையிலும் தூண்டிவிட்டது என்றே கூறவேண்டும்.

இதில் அவருக்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்புக்களையும் சமாளித்துக் கொண்டாரென்பதைக் கூறத் தேவையில்லை. எவ்வகை மாற்றத்தையும் சீர்திருத்தத்தையும் எதிர்க்கும் கும்பலுக்கு ஜிமா — கியாங் என்ற பிரசித்தி பெற்ற சரித்திர ஆசிரியர் தலைமை வகித்தார். இந்த இரண்டு பெரிய தலைகளுக்கிடையே சீனு இரண்டு முகாம்களாகப் பிரிந்தது; பலப்பரீட்சை நிச்சயம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

1069-ம் ஆண்டில் வாங்-அன்-ஷி ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றார். சக்கரவர்த்தி சின்—சுங் அவர்களின் ஆலோசகராக நியமிக்கப்பட்ட போழ்துதான் அந்த வாய்ப்புக் கிடைத்தது. அன்று அவருடைய எண்ணங்கள் நடைமுறைக்குவர ஏதுவாயின. சக்கரவர்த்தியின் செல்வாக்கைப் பெற்றார். எதிர்ப்பும் அந்தப் பொழுது அடக்கப்பட்டது.

வாங்—அன்—ஷியின் அரசியல் கொள்கைகளும், அவர் இயற்றிய சட்டங்களும் வியக்கத்தக்க முறையில் நவீனமாக இருந்தன. சக்கரவர்த்தியின் குடிமக்கள் அனைவருக்கும், அவர்களின் வாழ்க்கைத் தேவைகளைப் பெறுவதற்குரிய வாய்ப்பாவது உறுதியளிக்கப்படவேண்டும்; அதற்குரிய சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பது அவருடைய கொள்கை. அதுதான் அவருடைய சீர்திருத்தத்தின் அடிப்படை அம்சமுங்கூட.

அந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமானல், சுரண்டப்படும் உழைப்பாளி வர்க்கம் பணம்படைத்தவர்களால் மண்ணோடு மண்ணாக மிதிபடுவதினின்று மீட்கப்பட்டாக வேண்டும். அதற்காக விவசாயம், வாணிபம், கைத்தொழில் ஆகியவற்றின் நிர்வாகத்தை அரசாங்கம் கைக்கொள்ளவேண்டும் என்று அவர் முடிவு செய்தார். அன்றுட விலைவாசிகளையும், கூலியையும் ஒழுங்குபடுத்த பல குழுக்களை நியமித்தார். பின்னர் விவசாயத்தையும், வரிமுறையையும் ஒழுங்குபடுத்துவதில் கவனஞ் செலுத்தினர்.

வரி விதிப்புக்கான சமநிறை அடிப்படையே ஏற்படுத்தவேண்டி பயிர் செய்வதற்குத் தக்க நிலையிலிருந்த எல்லாநிலங்களையும் அளக்க ஒரு புது நிலஅளவை கைக்கொள்ளப்பட்டது. விளைச்சலைப் பொறுத்து நிலங்களைத் தாரதரப் படுத்தினர். வேலையற்றிருந்தோரை பயிர் செய்யப்படாதிருந்த நிலங்களில் குடியமர்த்தி விதைத் தானியங்களும் உழுகருவிகளும் கொடுத்துதவினர். ஆனல் அவர்கள் தங்கள் விளைச்சல் கைக்குக் கிடைத்தபின் அவற்றிற்கான விலையைக்கொடுத்துவிடவேண்டுமென்ற நிபந்தனைக்கு உள்ளாக்கினர்.

அதுவரையில், வரி வசூலித்து வந்தவர்கள், விளைச்சலைப் பெற்றுத் தலைநகருக்கு அனுப்பி, அங்கு அதை விற்று, ராஜாங்க பொக்கிஷ சாலையை நிரப்பினர். ஆனல் இந்தப் புதிய முறைப்படி விளைச்சல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பகுதி மத்திய அரசாங்கத்தின் வரிக்கென்று உபயோகப்படுத்தப்பட்டது. இரண்டாவது பகுதி விளைச்சல் விளைந்த ஜில்லாவின் தேவைக்காக சேமிக்கப்பட்டது. மூன்றுவது பகுதி, அரசாங்கத்திற்கே ஒரு குறைந்த பட்ச செட்டான விலைக்கு விற்கப்பட்டது. விலைவாசி ஏற்றத்தை எதிர்பார்த்து முன்கூட்டியே சேகரம் செய்வது மத்திய அரசாங்கத்திற்கு அவசியமாயிற்று. சேகரிப்பினல் மற்ற ஜில்லாக்களின் தேவைக்கு விநியோகம் செய்வதற்கும், விலைவாசிகளை ஓரளவு சமன் செய்வதற்கும் ஆகிய இரு நோக்கங்கள் நிறைவேறின.

ஏழைகள் வரி கொடுப்பதினின்று பூரணமாக விலக்கு அளிக்கப்பட்டனர். மத்திய ரிசர்வ் நிதி யொன்று ஏற்படுத்தப்பட்டது; இது முதுமை வந்துறும்போது தரவேண்டிய உபகாரச் சம்பளம் கொடுக்கவும், வேலையில்லாதோருக்கு சன்மானங்கள் தரவும், பொதுவாக ஏழை மக்கள் துயர் தீர்க்கவும் பயன்படுத்தப்பட்டது,

துரதிருஷ்டவசமாக, அவர் சோதனை வெற்றிபெறுவதில், சமாளிக்க வேண்டிய ஒரு பிரச்சினையை —இன்றைய சமதர்மவாதிக்குக்கூட தலைவலியாயிருக்கும் பிரச்சினையை —எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதுதான் நாட்டின் பாதுகாப்புப் பிரச்சினை. சீனுவின் பெருஞ்சுவர் ஓரளவு பாதுகாப்பு அளித்தபோதிலும், மத்திய ஆசிய பாழ்நிலத்திலிருந்துவரும் நாடோடிக் கும்பலின் படையெடுப்பு, சீனுவைப்பொறுத்த வரையில், தீராத நோயாக இருந்தது. அவர்களின் படையெடுப்பை முறியடிக்க நன்கு பழக்கப்பட்டஓர் ராணுவம் எந்த விநாடியும் போரிலிறங்கத் தயாராக இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

வாங்-அன்-ஷி எடுத்துக்கொண்ட ராணுவப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மக்கள்—அவருடைய சமூக பொருளாதார சீர்திருத்தத்தால் பெரிதும் பயனடைந்த மக்களே—வரவேற்கவில்லை. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்களைக் கொண்ட ஒவ்வொரு குடும்பமும் அரசாங்கத்திற்கு ஒரு போர்வீரனை நல்கவேண்டும், என்றார். நாடோடிக் கூட்டம் குதிரைகளின்மேல் வந்து படையெடுப்பதினுல், அவர்களைச் சரியானபடி எதிர்க்க, ஆயுதந் தாங்கிய குதிரைப்படை ஒன்று முதல் தரமான அவசியமாயிற்று. அதற்காக ஒவ்வொரு குடும்பமும் ஒரு குதிரையை வளர்க்கவேண்டுமென்று உத்தரவிட்டார். குதிரை வாங்க சக்தியற்ற ஏழைக் குடும்பமாக இருந்தால், குதிரை ஒன்று கொடுத்து, யுத்தகளத்திற்கு வேண்டும்பொழுது உடனடியான உபயோகத்திற்குத் தயாராக வைத்திருக்கும்படி கட்டளை யிடப்பட்டது.

வாங்-அன்-ஷியின் சீர்திருத்தங்களுக்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது என்பதில் சந்தேகமேயில்லை. சக்கரவர்த்தியின் நன்மதிப்பும் ஆதரவும் அவருக்கு ஒரு பத்து ஆண்டுகள் இருந்ததினுல், அவருடைய கொள்கைகள் நடைமுறையில் ஓரளவு உருப்பெற்றன. ஆனல் அவர் ஆலோசகர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, நான்கிங் கவர்னராக நியமிக்கப்பட்டவுடன், அவைகளுக்குத் திடீரென முடிவு கட்டப்பட்டது. கவர்னராக ஆறு அல்லது ஏழு ஆண்டுகளாயிருந்தார். 1086ல் இறந்தார். எனினும், அவர் தம்

(6-ம் பக்கம் பார்க்க)

"பாராசக்தி" இரு பட விளக்கம்!

அவதிப்பட்டுக்கொண்டு, ஆணும் பெண்ணுமாக இருவர், கைநீட்டிக் கேட்கிறார்கள்—கதவருகில் நின்ற வண்ணம் கையில் சிறு துண்டை நீட்டுகிறார், ஒருவர், அவர்களுக்கு.

இவ்விதம், சித்திரமொன்றை, இந்தவாரம் 'ஆனந்தவிகடன்' இதழ் பிரசுரித்திருக்கிறது. கைநீட்டி யாசிக்கும்இருவரும்,சென்னை மாகாணத்துவாசிகள். கதவருகில் நிற்பவர், டில்லி மந்திரி, டி. டி. கிருஷ்ணமாச்சாரி.

கைத்தறியாளர் அவதியையும் அவர்கள் கைநீட்டியாசிப்பதையும், வேதனைக்குரல் கேட்ட வியாபார மந்திரி தந்த 'பரிசை'யும், விளக்கிக் காட்டுகிறது, மேற்படி சித்திரம்.

யாசிப்போர், உடல்முழுவதையும் மறைக்க உதவி கேட்கிறார்கள்—கிடைப்பதோ, சிறு துண்டு! அதைக்கொண்டு, ஆடைத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளுமாறு, அறிவுறுத்துகிறார், அமைச்சர். 'ஆடைத்தேவை' என, சித்திரக்காரர் குறிப்பது, அவர்களுடைய பசியை — வேதனை நிலைமையை அந்த வேதனைக்குரலுக்கு, சின்னஞ்சிறு 'துண்டு' தரப்படுகிறது, டில்லியால்.

உண்மையில், கைத்தறியாளர் பிரச்னைக்கு, 'டில்லி' வழங்கியிருக்கும், 'தீர்ப்பு' குறித்து, தமது அதிருப்தியை, தேசிய இதழார், சித்தரித்துள்ளார், இதழில்.

கேட்டது, முழு உதவி! கிடைத்தது, வேதனை!! உடலை மறைக்க, இருவர் கேட்டனர்—உதவி கிடைப்பதோ, சிறு துண்டு. அதுவும், ஒன்றே ஒன்று. 'ஏதோ! தொல்லை பொறுக்கமுடியவில்லையே சப்தத்தை அடக்க ஏதாவது சொல்லுவோம்' எனும் போக்கில்.

இந்த விசித்திரப் பதிலை, டில்லியாரிடமிருந்து, கைத்தறிப் பிரச்னையில் மட்டுமல்ல, எல்லா விஷயங்களிலும் கண்டுவருகிறோம். கைத்தறியாளர் சம்பந்தமாக, சென்னை சர்க்கார் சட்டசபையில், தீர்மானம் செய்து, அனுப்பியதற்கு கிடைத்த பதில் ஓரவஞ்சனை. அதனை, விளக்க முயற்சிப்பதே, 'ஆனந்தவிகடன்' தீட்டிய சித்திரம்.

ஆனந்தவிகடன்—தேசீய இதழ்; எனினும், கைத்தறியாளர் அவதி, தென்னாட்டைச் சூழ்ந்துவரும் தீ போல வளர்வதால், பிரச்னையின் முக்கியத்துவத்தையும், தன்மையையும் உணர்ந்து, தீட்டுகிறது, சித்திரமூலம் — தனது கண்டனத்தை.

ஆனால், பம்பாயிலிருந்து வெளிவரும், ஏடொன்று, தென்னாட்டு தறியாளர் பிரச்னை சம்பந்தமாக, நவ-30ந்தேதி, சித்திரமொன்று தீட்டியிருக்கிறது. அதுவும்—தேசிய ஏடுதான் பெயர், "டைம்ஸ்—ஆப்—இந்தியா"

பட்டுப்புழு ஒன்று! அதை விழுங்க கால்களை நீட்டிக்கொண்டு பாயும் சிலந்திப் பூச்சி!!—இவ்விதம், மேற்படி இதழ், ஒரு சித்திரத்தை பிரசுரித்துள்ளது.

"பட்டுப்புழு—ஆலைகள். சிலந்திப்பூச்சி—ஆச்சாரியார்"—இவ்வித விளக்கமும், தரப்பட்டுள்ளது. பட்டுப்புழுவை, விழுங்க, சிலந்திப் பூச்சி பாய்கிறதாம்!

ஆலைகளை விழுங்க, 'ஆச்சாரியார் பிடிவாதம்', வழி செய்கிறதாம். வேதனையோடு, வெளியிடுகிறது, பம்பாய் ஏடு.

சென்னை ஏடோ, வஞ்சிக்கிறது வடநாட்டுப் பீடம்' என்று கண்டிக்கிறது.

பம்பாய் ஏடோ, 'பாய்கிறது, மேற்படி தீர்மானம் ஏன்' என்று, சீறுகிறது.

இரண்டு ஏடுகளும், தேசிய முரசத்தை, எழுப்புபவைதான். ஆனால் சிறுவித்யாசம், ஒன்று சென்னையிலிருப்பது! மற்றொன்று பம்பாயைச் சேர்ந்தது!!

சென்னையில் வாழ்வோரின் அவதி, வரம்பைத் தாண்டிவிட்டதால், வெள்ளம் பெருகிவிடும், ஆபத்து அரும்பும் என்பதால், அலறுகிறது—வேண்டுகிறது—கண்டிக்கிறது, டில்லியை, "கைத்தறியாளருக்காக கரைபோட்ட வேட்டியையும், சேலைகளையும் ஒதுக்கிடு" என்று வலியுறுத்துவதுபோல.

அப்படிச் செய்வது, ஆலைகளை சிலந்தி விழுங்குவதைபொக்கும் என்று அபாயச் சங்கு ஊதுகிறது, பம்பாய் ஏடு.

இந்த இடத்தைத்தான் மதிப்பிற்குரிய தேசியத் தோழர்களின் திருப்பார்வைக்கு வைக்க விரும்புகிறோம்.

*

கைத்தறியாளர், நிலை—நமது பூமியில், கண்ணீர் வடித்த கட்டம் தாண்டி, பிரேதக்குழி வெட்டி வைக்கவேண்டிய நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. வில்லிபுத்தூரிலே கிளம்பி, தமது வேதனையை விளக்கிய வண்ணம், சென்னை செகரட்டேரியட்டை வலம் வந்துகொண்டிருக்கிறார்கள், தறியாளர்கள். மூன்றாண்டு காலமாக, அவர்கள் அனுபவித்துவரும் அல்லல்கள், எட்டிலெழுத அடங்காது! அவ்வளவு வேதனை. குழந்தைகளை விற்றார்கள் — பசியைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. மண்சுமந்து வேலைதேட, அணைக்கட்டு கட்டுமிடங்களை நோக்கி ஓடினார்கள்—அணையவில்லை வறுமை. 'நூலில்லை! நூலில்லை!!' என்று கதறினார்கள்—பல காலம். இப்போது, நூல் கிடைத்தாலும் பயனில்லை—நெய்த துணிகள் தேங்கிக்கிடக்கின்றனவே என்று, திகைக்கிறார்கள். இவ்விதம் வளர்ந்துவரும் சூழ்நிலையின் விளைவாக, நாம் கண்டறியாதனவெல்லாம் காண்கிறோம்! இமயத்திலே கொடிநாட்ட தமிழர்பரம்பரை, காலாட்படையுடன், கம்பீர நடைபோட்டு வடக்கு நோக்கிச் சென்றதாகப் படித்திருக்கிறோம். ஆனால் இப்போது! வயிற்றுக் கொடுமையைத் தீர்த்துக் கொள்வதற்காக, கண்ணிலே நீரும், வழியிலே பிச்சையெடுத்துக்கொண்டும், தள்ளாடி தள்ளாடி நடக்கிறது, அந்த வீரர் சமுதாயம்—வயிற்றுக்காக. இந்த விந்தையான செய்தியைக்கண்டும், குறைதீர்க்கும் 'அதிகாரம்' இல்லாத ஆச்சாரியார், அண்ணாந்து பார்க்கிறார் டில்லி பீடத்தை!

கலர் கண்ணாடியாரின் பார்வையைக் கண்டதும், ஒருபோது 'பராக்கு' கூறிய வடவர்பீடம், அலட்சியத்தோடு, பார்க்கிறது!

ஆச்சாரியாரின் கோரிக்கைக் கிணங்காத 'டில்லி'யை ஆனந்த விகடன், படம் தீட்டி, கண்டிக்கிறது.

வடவர்பீடம், தமது 'பீரங்கி' மூலம் படம் தீட்டி, அபாயச் சங்கு ஊதுகிறது.

விகடன், எஸ். எஸ். வாசனின் இதழ்! டைம்ஸ்—ஆப்—இந்தியா, டால்மியா பிரபுவின் ஏடு!! எதை மதிக்கும், டில்லி சர்க்கார்?

ஆலை அதிபனோ! அன்றாடம் காய்ச்சியையா!!

கொலையுண்ட மானின், தலையையும் உடலையும் மூன்று கால்களையும் விழுங்கிக்கொண்டிருக்கும் புலியிடமிருந்து, கால் ஒன்றைமட்டும் பிடுங்க எத்தனிக்கும்போது, 'கால் தானே? பரவாயில்லை!' என்று போய்விடாதல்லவா; அதைப்போல கைத்தறிக்கே 'சிறிது சலுகை தாருங்கள்' என்று அவதிப்படும் நாம் கேட்டதும், வடநாட்டார்சீறுகிறார்கள். டால்மியாவின் ஏடு, ஒருபோது அன்பர் ஆச்சாரியாரை வானளாவப் புகழ்ந்ததாகும்! அது, இன்று அவரை சிலந்தியாகச் சித்தரிக்கிறது! இவ்விதம், அது படம் தீட்டுவதற்கு இரண்டுநாட்கள் முன்னர் ஷோலாப்பூர் ஆலை அரசர்கள் ஒன்றுகூடி, சீறியிருக்கிறார்கள், தென்னாட்டின்மீது. நாம கோருவது, அநியாயமானதாம்! அக்கிரமமாம்!!

* * *

இந்தியாவிலேயே மூளை வளமும் பூமிச் செழிப்பும் சிறந்தது தென்னாடெனப் புகழ்ந்திருக்கிறார்கள்—மேல்நாட்டு அறிஞர்கள். வடநாட்டிலிருந்து வரும் தேசீயத் தலைவர்களும், அவ்வித புகழுரையை அள்ளி வீசாமல் செல்லுவதில்லை. அன்பர் ஆச்சாரியாரின் படத்தைத் திறந்துவைத்து, பிரதமர் பண்டித நேரு பாராட்டியிருக்கிறார் — பல முறை. ஆனால், இன்று அவர்களால் போற்றித் துதிக்கப்பட்ட அதே ஆச்சாரியார் மக்களின் கோரிக்கையொன்றை எதிரொலிக்கும்போது, தாமதமாகிறது நேருவின் சர்க்காரில்! தாண்டவம் புரிகிறது, கோபத்தோடு, டால்மியாவின் ஏடு!!

"நியாயம் நிரம்பியது — 45 லட்சம் மக்களின் வாழ்க்கையைக் குறித்த விஷயம் இது—எல்லாநிலைமைகளையும் உணர்ந்தே கூறுகிறேன் இந்த யோசனையை—என்னுடைய வடநாட்டு நண்பர்கள் இதனை மறுக்கார் என நம்புகிறேன், "இவ்விதம் அழகாகவும், அன்பு சொட்டவும், சோகத்துடனும், வேண்டுகோள் போலவும், கோரிக்கைவிடுத்த அன்பர் ஆச்சாரியார் விழிக்கிறார் — டில்லியின 'பதில்' கண்டு!

அன்பர் அவர்கள் அமர்ந்திருக்கும் அரசாங்க பீடம், ஆறுகோடி மக்களுடைய சொத்து. அத்தனை பேருக்கும், அரியணையில் அமரும் 'பாக்கியம்'நழுவும்வரை, அவர்தான் அதிபர். ஆனால் அவர், விழிக்கிறார்! சின்னஞ் சிறுவிஷயம், "கைத்தறிகள்மட்டுமே சேலைகளையும் வேஷ்டிகளையும் தயாரிக்க வேண்டும். ஆலைகள் தயாரித்து அனுப்பினால் அவைகளை என் மாகாண சர்க்கார் ஏற்காது" என்று உத்தரவு பிறப்பிப்பது.

ஆனால், இந்தச் சாதாரண உத்தரவை எழுதக்கூடிய அதிகாரமெனும் பேனாவை, வடவரிடம் வழங்கிவிட்டு விழிக்கிறார் இன்று. வெந்த புண்ணில் வேல் வீசுவது போல, சித்திரம் போடுகிறது, டால்மியாவின் இதழ்.

ஆறுகோடி மக்கள் அவதிப்படுகிறார்கள்!—அவர்கள் தங்களுக்கான சௌகரியங்களைச் செய்துகொள்ள முடியவில்லை. 'ஏன், இது?'—என்று கேட்டால், 'மாகாண சர்க்காருக்கு ஏது, அதிகாரம்?' என்பார்கள்.

"அதிகாரத்தைப் பெறுவது தானே?"—என்றால், "அதெல்லாம் மத்ய சர்க்காரிடம்தான் இருக்க வேண்டும்" என்பர்.

"எதற்காக மத்ய சர்க்காரிடம் இருக்கவேண்டும்?" — என்றால், "அப்போதுதான் இந்தியாவெங்கும் ஒரே சீரான அரசாங்கம்நடக்க இயலும்" என்று பதிலிறுப்பர்.

"அவ்வளவு பெரிய மத்யசர்க்கார் இல்லாமல், உலகில் நாடுகளே இல்லையோ?" என்று வினவினால், "நாற்பதுகோடி மக்களின் சங்கம்—அதுவே நம் இந்திய மாதா"என்று கொஞ்சம். முறைப்போடு பதில் சொல்வார்கள்.

அத்தகைய நண்பர்களுக்கு நவ 26ந்தேதி டில்லி பார்லிமெண்டிலே ரெவினியு மந்திரி தியாகி, ஒருகேள்விக்கு விடுத்த பதிலை சுட்டிக் காட்ட விரும்புகிறோம். "மரணவரி விதிக்கும் நாடுகளின் பட்டியலைத் தரமுடியுமா?" என்று உறுப்பினர் ஒருவர் கேட்டாராம். அதற்குப்பதிலளித்திருக்கிறார், தியாகி. அந்தப் பதிலைக்காண வேண்டுகிறோம் — அவர்தந்த விளக்கத்தை நீங்கள் உணரவேண்டுமென்பதற்காக அல்ல, அவர் கூறிய நாடுகளின் விபரத்தைக்காண வேண்டுமென்பதற்காக.

"அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஹாலந்து, ஸ்விட்ஸர்லாந்து, பெல்ஜியம், இத்தாலி, ஆஸ்திரியா, செக்கோஸ்லோவேக்யா, ஸ்பெயின், நார்வே, ஸ்வீடன், டென்மார்க், போலந்து, பின்லாந்து, போர்ச்சுகல், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, கானடா, தென் ஆபிரிக்கா,இலங்கை, மலேயா, பாகிஸ்தான், சயாம்,அர்ஜண்டைனா ...."

தியாகி தந்த பட்டியலின் ஒரு பகுதி இது.

"இதென்னப்பா! இந்த தேசங்களைத்தான் எல்லோருக்கும் தெரியுமே. இந்த நாடுகள் யாவும் தனி அரசு நடத்திக்கொண்டிருக்கும் பொழுது ஏன், எங்கள் திருவிடம் தனியாக வாழமுடியாது என்று எத்தனையோமுறை எழுதியும் பேசியும வருகிறீர்களே. அதை மீண்டும் எடுத்துச் சொல்லப்போகிறாயோ?" என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு. அல்ல, நண்பர்களே அல்ல! இந்நாடுகளின் விபரத்தைக்காட்டி மீண்டும் வலியுறுத்தவில்லை நான். இவைகளின் பெரும் புகழும், யாவரும் அறிந்ததுதான்! அகில உலக அரங்கில் உலவும் இந்த நாடுகளையும் தவிர்த்து, வேறுசில நாடுகளும் இருக்கின்றன. இவைகளைவிட உருவிலும் அளவிலும் எவ்வளவோ சிறியவை. பெயர்களைக்கூட, எல்லோரும் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கமுடியாது—பட்டியலைப்பாருங்கள்:— "பஹாமாஸ், ஹாங்காங் பிரதேசம், பார்படோஸ், டிரினிடாட், டோபாகோ, ஜமைகா, லீவார்டுதீவு, கினியா, பால்க்லாந்து, பீஜி, பனமா, பெரு, சால்வேடார்"

சின்னஞ் சிறியவை! முக்கியத்துவம் இல்லாதவை. ஆனால், முழுச் சுதந்திரத்துடன், வாழ்கின்றன. இந்த நாடுகளில், நம்மளவுக்கு ஜனத்தொகை கூட இல்லை. ஆனாலும், தமது மக்களுக்கான சட்டங்களைச் செய்து கொள்ளவும், வரிகளைக்குறைக்கவும் அதிகரிக்கவுமான அதிகாரங்களுடனும் விளங்குகின்றன. ஆனால், ஆறுகோடிமக்களின் முதலமைச்சரான, ஆச்சாரியார் அவர்களோ, தீர்மானம் நிறைவேற்றி அனுப்புகிறார்! சீறுகிறது வடவர் ஆதிக்கம்—'சிலந்தி என சித்திரிக்கிறது வடவர் குரல்'!!

*

கடந்த வாரம் 'தினத்தந்தி' இதழொன்றிலே, சிந்தையைக் கொட்டும், செய்தியொன்று வந்திருந்தது. அடிக்கடி நாம் கேள்விப்படுகிற

(2-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழுளியிலேயே தாம் கொண்டுவந்த சீர்திருத்தங்கள் அழிந்து மறைந்ததையும், பிறபோக்குக் கும்பல்கள் பழைய சுரண்டலை மேற்கொண்டதையும் கண்டார்.

ஆனபோதிலும் அவருடைய செல்வாக்கு அவருடன் மறைந்து விடவில்லை என்றே தோன்றுகிறது. இறந்தபின் இருபது ஆண்டுகள் வரை கன்பூஸியஸ் மண்டபத்தில் அவர் நினைவு கொண்டாடப்பட்டது. சிறந்த அறிவாளியும், கன்பூஸியஸின் கொள்கைகளை எடுத்துரைத்தவருமான மென்ஸியஸுக்கு அடுத்தபடியாக அவர் பெயர் புகழப்பட்டது. அந்தப் புகழும்கூட அதிககாலம் நீடிக்கவில்லை. பிற்போக்குக் கும்பல்களின் பலம் ஓங்கிற்று, அவர் பெயர் மங்கிவிட்டது. அதுமுதல் சமீபகாலம்வரை அவர்தம் சாதனைகளைக் குறைத்துப் பேசுவதே நாகரிகமெனவும் கருதப்பட்டுவந்தது.!

அவர்தம் புரட்சி உள்ளம் படைத்த ஆதரவாளர்கள் மங்கோலியாவிற்கு நாடு கடத்தப்பட்டனர். சீனாவின் அரசியல் மாறுதலுக்கு இடங்கொடாத பிடிமானமான பழமையிலேயே நிலை நிறுத்தப்பட்டுவிட்டது.

வாங்—அன்—ஷியின் உயர்ந்த சமுதாயப் புரட்சித் திட்டம் தோல்வியடைய பல காரணங்கள் தென்படுகின்றன. முதலாவதாக, எந்தவிதமான புதுமையையும் எதிர்க்கும் தொன்றுதொட்டு வழிவழிவந்த ஊறிப்போன வைதீகத்தின் பலம். அது சீனமக்களின் முக்கிய குணாதிசயமாக இருந்தது. மேலும் சக்திமிகுந்த ராஜதந்திரியான ஜிமா—கியாங் தலைமையின் கீழ் அவர்கள் ஒன்று கூடினர். அதனால் சீர்திருத்த இயக்கம், எதிர்ப்பு அணி என்ற பாறையின்மேல் மோதி உடையவேண்டியதாயிற்று.

இரண்டாவதாக, என்றுமுளசீனாவில் கொழுத்து வளர்ந்த லேவாதேவிக்காரர்கள், புதிய ஆட்சிமுறை தங்களைப் பாழாக்கிவிடும் என்று தெரிந்தனர். ஆகவேபலமாக எதிர்த்தனர்.

மூன்றுவதாக, புதிய ஆட்சி முறையை நிர்வகித்து நடத்தவந்த அதிகாரிகளின் தன்மை நேர்மையற்றதாக இருந்தது. விவசாயிகளுக்கு விதைகளும், உழுகருவிகளும், வழங்கவேண்டிய அதிகாரிகளும், வரிவசூலிப்பவர்களும் பெருமளவில் ஊழல் புரிய உறுதுணை நின்றார்கள். பொதுவாகக் கூறுமிடத்து சராசரி மனிதத்தன்மையின் இயற்கையான பலக்குறைவினால் ஏற்பட்ட நாசம் கொஞ்ச நஞ்சமல்ல.

நான்காவதாக அவர் மேற்கொண்ட ராணுவ ஏற்பாடுகளினால் மக்கள்பட்ட தொல்லைகள் அளவு மீறின. அவருக்கு உறுதுணையாக இருக்கவேண்டிய ஆதரவாளர்களையே, அவர்களின் அநுதாபத்தையே அவர் இழக்கவேண்டி நேரிட்டது எனலாம்.

வாங்—அன்—ஷியின் சீர்திருத்தப் பணிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. சீனா ஐரோப்பாவுடன் சம்மதம்கொண்டில்லாத காலம் அது. வாணிபம் காரணமாக ஒருசில தொடர்புகள் ஏற்பட்டது உண்மை. ஆனால் சமூக அரசியல் விஷயங்களைப் பொறுத்தவரையில் ஐரோப்பாவின் நிழல் சீனாமீது படியவில்லை. கிரேக்க ராஜ்யமான பாக்ட்ரியா (Bactria) வழியாக கிரேக்கர்களின் கலை அம்சம் சீனாவில் பரவியிருந்ததும் உண்மை. கிறிஸ்துமத பாதிரிகள் நல்ல முறையில் வரவேற்கப்பட்டு, இருக்க இடம்பெற்று உபசாரம் பெற்றனர். எது எப்படியிருந்தாலும் வாங்—அன்—ஷியின் கொள்கைகள் அனைத்தும் சீன மண்ணிலேயே பிறந்தவை என்று கூறலாம். ஆனால் அந்தக் கொள்கைகள் அனைத்தும் நவீன ஐரோப்பியப் பொருளாதாரப் பேராசிரியர்களின் கொள்கைகளுக்கு ஏகதேசமாக ஒத்துவருவது ஆச்சரியமாக இருக்கிறது.

வாங்—அன்—ஷி இயற்கையிலேயே சிறந்த அறிவாளி. தைரியமான புரட்சி வீரர். அவருடைய திறமை அனைத்தையும் சக்கரவர்த்தியின் சேவைக்கும், மக்களுடைய தொண்டுக்கும் அர்ப்பணித்தார்.

வருந்துகிறோம்

நமது 'திராவிடநாடு' அலுவலகத்தில் பணியாற்றியவரும், தி. மு. க. முன்னணி வீரருள் ஒருவருமான காஞ்சிபுரம் தோழர் K. T. S மணி அவர்களின் தாயார் அகிலாண்டம்மாள் சிறிது காலம் நோய் வாய்ப்பட்டு, கடந்த 1-12-52ல் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்திகேட்டு வருந்துகிறோம். தாயைப் பிரிந்து தவிக்கும் தோழர் மணிக்கும், அவரது தந்தையாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

டாக்கிய புயல்தான் அது! ஆனால் அந்தப் புயல்களெல்லாம் புஸ்வாணமாகிவிட்டன. புதிய தலைவரை இழித்தும் பழித்தும் பேசிப் பொதுஜன செல்வாக்கைத் திரட்டிக் கொண்டே இருந்தார், புண்யகோடி. அதன் விளைவாக ராஜநிலையத்தார், புண்யகோடியின்மீது வழக்குத் தொடர்ந்தார். நகரசபையின்மீது மானநஷ்டமுண்டாக்கியதாகக் கூறப்பட்டு, புண்யகோடி பததாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு தரவேண்டுமென்று தீர்ப்புத் தரப்பட்டது, நீதிமன்றத்திலே.

புண்யகோடியின் வயிறு எரிந்தது. பொது மேடைகளிலே முழங்கினார். பொதுமக்கள் நன்கொடைகள் வசூலித்தனர். பத்தாயிர ரூபாயை பொதுமக்களே தந்தனர். நஷ்டஈட்டை புண்யகோடி கட்டினார்.

பொதுத் தொண்டுச் சிங்கம் புண்யகோடி என்ற விருதுகள் வழங்கப்பட்டன. புண்யகோடி பூரிப்போடு உலவினார் — பொதுமக்களின் இருதயங்களை மிதித்துக் கொண்டு!

மீண்டும் நகரசபைத் தேர்தல் வந்தது. இந்தத் தேர்தலிலே புண்யகோடி ராஜநிலையத்தாரை மூர்க்கமாக எதிர்த்தார். ராஜநிலையத்தார் மட்டுமே தோற்றார். மஞ்சள் கட்சி உறுப்பினர்கள் பலர் வெற்றி பெற்றுவிட்டார்கள். அதன் காரணமாகத் தலைவர் பதவிதான் மாறியதே தவிர, நகரசபை—எதிர்க்கட்சியினரிடமே இருந்துவிட்டது. நகரசபைக்குத் தலைவராக இந்த முறை வந்தவர் மிகவும் கொடியவர். நகரத்துக்கே அவர் நாசம் விளைவிப்பவர் என்று எல்லோரும் கருதினர். புண்யகோடியிடம்வந்து புலம்பினர். "இவ்வளவு கஷ்டப்பட்டீர்களே... கடைசியிலே அந்தக் காதகன் நகரசபைத் தலைவனாக வந்துவிட்டானே" என்று அலறினர். புண்யகோடியும் கண்ணீர் விட்டார்.

மாதங்கள் சில உருண்டன. புதிய நகரசபைத் தலைவரின் அட்டகாசம் தாங்கமுடியவில்லை. பொதுமக்கள் குமுறும் எரிமலைகளாகிவிட்டனர் அப்போது, புண்யகோடி புதிய தலைவரைப்பற்றி ஒரு மேடையில் பேசப்போவதாக விளம்பரம் செய்தார். மக்கள் திரண்டுவந்தனர். முதலில் புண்யகோடியின் காரியதரிசி பேசினார். புதிய தலைவரைக் காரசாரமாகத் தாக்கினார். மக்கள் குதூகலித்தனர். அடுத்துப் புண்யகோடி எழுந்தார். பொதுமக்கள் ஆவல் ததும்பியபடி அவர் பேச்சை எதிர்நோக்கினர்.

புண்யகோடி பேசினார். "நண்பர்களே! நான் புதிய தலைவரை ஆதரிக்கிறேன்" என்று கூறிவிட்டு மேடையிலிருந்து கீழே இறங்கினார்.

பொதுமக்கள் வாயடைத்துப் போயினர்.

காரியதரிசி கர்ச்சிக்கிறார். புண்யகோடி இப்படிப் பேசுகிறார். என்ன ஆச்சரியம்! என்று நகரமே வியந்தது.

"நீ தாக்கு"

"நான் ஆதரிக்கிறேன்" என்று திட்டம் போட்டிருக்கிறார்கள் என்றனர் சிலர்.

"புதிய தலைவருக்கும் புண்யகோடிக்கும் ஏதோ பேச்சு நடந்திருக்கிறது" என்றனர் சிலர்.

"எல்லாம் நன்மைக்குத்தான்" என்றனர், புண்யகோடியின் பரம்பரைப் பக்தர்கள்.

பாவம்; அவர்களுக்கெல்லாம் தெரியாது—புண்யகோடி, மீண்டும் அனுப்பிய பழைய விண்ணப்பத்தை புதிய சேர்மன் கவனித்துப் பத்தாயிர ரூபாயை வீடுபெழுது பார்க்கத் தந்துவிட்டார் என்ற சேதியும்—புண்யகோடியிடம் பழைய நகரசபை நஷ்ட ஈடாகப் பெற்ற பத்தாயிரத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார் என்ற தகவலும். எல்லாம் எப்படியோ மறைக்கப்பட்டுவிட்டன. புண்யகோடி பொதுஜனத் தொடர்போடுதான் உலவுகிறாராம். இதை மட்டும் அவர் காரியதரிசி சொல்கிறார்.

கண்டோம்! திகைத்தோம்!!

அரங்கண்ணல்

நானும்—நண்பர்கள் மு. கருணாநிதி, என். வி. நடராசன், கண்ணதாசன் ஆகியோரும், பம்பாய் தி. மு. க. செயல் வீரர்கள் சிலருடன் சென்றுகொண்டிருந்த போது கண்டோம்! திகைத்தோம்!

ஒரு காட்சி—எங்களை உலுக்கி விட்டது—ஒரு சில நிமிடங்கள்! திகைத்துப்போய் நின்றோம். மேற்படி காட்சி, எங்களுக்குக் காணக் கிடைத்த இடத்தின் பெயர், மாதுங்கா.

சென்னைக்கு ஒரு மயிலாப்பூர்! பம்பாய்க்கு ஒரு மாதுங்கா!! 'நம்மவா'—சுகமாக வாழ்ந்துகொண்டிருக்கும் திருத்தலம், அது. அங்கே போய்க்கொண்டிருக்கும் போதுதான், மேற்படி காட்சியினைக் கண்டோம்.

காட்சியென்றால், இலேசான காட்சியா? அல்ல, அல்ல! இருநூறு முந்நூறு புறாக்கள் இருக்கும். கார்களும், ஆள் நடமாட்டமும் நிரம்பிய கடைவீதியின் மத்தியிலே நிற்கும் 'தூங்குமூஞ்சி' மரத்தின் கீழ் கூடிக் கிடந்தன. 'இதென்ன வேடிக்கை?' என்று திகைத்தோம். "கானம் எழுப்பியதெவர், இவைகளைச் சேர்க்க" — என்று சுற்றுமுற்றும் பார்த்தார், கண்ணதாசன். "கானமாவது, கத்தரிக்காயாவது! புறாக்களுக்கு அப்பால் நிற்கும் ஆசாமியைப் பார்த்தால், கானக் கவிஞனாகவா தென்படுகிறது?" என்று, கிண்டலோடு, சுட்டிக் காட்டினார் ஒரு உருவத்தை, மு. கருணாநிதி. கையில் ஒரு தட்டை வைத்துக்கொண்டு, சிறு 'யானை' போல ஒரு உருவம் நின்று கொண்டிருந்தது, அங்கே! "கூ! கூ!!" என்று சொல்லிய வண்ணம் கோதுமையை அள்ளி வீசிக்கொண்டிருந்தது அந்த உருவம்! கோதுமை மணிகளைக் கொத்த, பறந்து வந்து கொண்டிருந்தன, புறாக்கள்! "ஆகா — ஒரு துப்பாக்கியிருந்தால்.....?" என்று, நாவைச் சப்புக் கொட்டினார், என். வி. என். "என்ன நடக்கும் தெரியுமா? பெரிய கலவரமே விளைந்துவிடும். போலீசார் வந்து, கொண்டு போய் விடுவார்கள்" என்று, பம்பாய் கழக வீரர்கள் விளக்கினர். 'பசுவதை' பாதுகாப்பு இயக்கம் நடத்தப் படுகிறதல்லவா? அதைப் போன்று, 'ஆபத்பாந்தவனின் 'ஜீவராசிகளுக்கு, தீனிவைத்து, 'புண்யம்' சம்பாதிக்கிறார்களாம், அந்த இடத்தில்!!—டால்மியா பிரபுவின், ஜாதியைச் சேர்ந்தவர்கள். விளக்கினர்,நமது தோழர்கள். வியந்தேன், அவர்களுக் கேற்பட்டிருக்கும் 'அஹிம்சா' மார்க்க ஆசையைக் கண்டு. புள்ளினங்களும், மிருகவகைகளும், இனி இவர்களது அன்புக்கு அடிமைதான், என்றும் எண்ணினேன்.

காட்சியில் லயித்துக் கிடந்த என்னை, அந்த 'அகிம்சாமூர்த்தி'யின் அருகில் நின்றுகொண்டிருந்த சின்னஞ் சிறு உருவம் கவர்ந்தது. எட்டு ஒன்பது வயது இருக்கும்—கீழே ஒரு கோவணத் துணி; எண்ணெயில்லாத தலை; குழி விழுந்த கண்களோடு நின்றுகொண்டிருந்தது. கீழே சிந்திய கோதுமை மணிகளை அதன் கண்கள் பார்க்க, கைகளிரண்டையும், அந்தப் 'பிரபு'வின் பக்கம் நீட்டி, "பாபுஜீ! கூச். தேதிஜீயே!" என்று கலங்கிய குரலில கூறிக்கொண்டிருந்தது.

விஷயம் புரியாத நான், தோழர்களைக் கேட்டேன். "அந்தக் குழந்தை என்ன சொல்கிறது?" என்று. தோழர்கள் தந்த விளக்கம் மீண்டும் எங்களைத் திகைப்புக் கடலில் தள்ளிற்று—பறவைகளுக்குத் தானம் செய்யும் அந்த பரம தயாளரை நோக்கி, அந்தக் குழந்தை "பிரபு, கொஞ்சம் எனக்குப்போடுங்கள்" என்று கேட்டதாம். புள்ளினங்களைப் புரக்கும் புரவலர்! அவருக்கு அருகே வயிற்றைக் காட்டி அழும் சிறுகுழந்தை!! புண்யம் சம்பாதிக்க, ஜீவராசிகளிடம் அன்பு காட்டும், அந்தப் 'பிரபு' என்ன செய்தார் தெரியுமா? கையிலிருந்த தட்டால் ஒரு மோது மோதி விரட்டிவிட்டு, வேகமாகச் சென்றார்!!

விசித்திரக் காட்சியைக் கண்டோம் — மனிதக்குழந்தை 'ஐயா! எனக்குக் கொஞ்சம்' என்று கேட்கிறது. அது, நடமாடும் தெய்வம்! அதற்கு அடி தருகிறார் — ஆனால், அதே நேரத்தில் புள்ளினங்களுக்கு கோதுமைத்துளிகளை வாரியிறைக்கிறார்,

இத்தகைய தீனதயாபரர்களின் தலைவராம் டால்மியாதான், பசுவதை பாதுகாப்பு இயக்கம் ஏற்படுத்திப் பல இலட்சங்களைச் செலவழித்து வருகிறார்.

தானம் செய்த அந்தப்பிரபுவுக்கு 'ஒரு தட்டு கோதுமை, மிக மிக அற்பமான விஷயம். ஆனால், அது கூடக் கிடைக்காமல், அவதிப்படுவோர் ஏராளம். அவர்களை விரட்டியடிக்கிறார்! விசித்திரமான தர்மம் செய்கிறார்!!

அதனால்தான் திகைத்தோம் — சிறிதுநேரம் அந்தச் சிறுவனைப் பார்த்தவண்ணம். எங்கள் இதயத்தைக் குலுக்கிற்று — அவன் ஓர் தமிழ்க் குழந்தை என்பதை அறிந்த போது!

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.